உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 15 சனிக்கிழமை (01.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 309

# இரண்டரை லட்சம் பேர் திரண்டு விண் அதிர உரிமைக் கோஷம்!

## பொங்கியது தமிழ் உணர்வு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்1


ஈழத்தமிழர்களின் நடைமுறை அரசை சர்வதேச சமூகம் அங்கீகரிக்கவேண்டும் எனக் கோரி நேற்றுமாலை நடத்தப்பட்ட மாபெரும் 'பொங்குதமிழ்' நிகழ்வில் தமிழ்த் தேசிய உணர்வு பொங்கிப் பிரவகித்தது.

குடாநாட்டின் நால் திசைகளிலும் இருந்து அலை அலையாக வந்துதிரண்ட சுமார் இரண்டரை லட்சம் மக்கள் பல்கலைக்கழக மைதானத்தை நிறைத்து நின்று விண் அதிர உரிமைக் கோஷம் முழங்கினர்.

தமிழர் உரிமைப் போராட்டத்தின்பால் சர்வதேச சமூகம் கொண்டிருக்கின்ற பாராமுகத்தை ஆட்சேபித்து மக்கள் ஆர்பரித்தனர். கொழுத்தும் வெயிலையும் பொருட் படுத் மக்கள் உணர்வு மேலீட்டால் ,ங்களை மறந்து கோஷமிட்டனர்.

எங்கள் தலைவன் பிரபாகரனே", "இராணுவமே எங்கள் மண்ணிலிருந்து உடனடியாக ரியேறு!", "சர்வதேசமே எங்கள் போராட்டத்தை அங்கீகரி!", "எங்களின் உணர்வுகளைப் புரிந்து [illegible]" என்ற கோஷங்கள் வானை பிளந்தன.

(18ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய பொங்கு தமிழ் நிகழ்வின்போது பல்கலைக்கழக மைதானத்தை நிறைத்திருந்த சன சமுத்திரத்தின் ஒரு பகுதி.



கரும்புலி லெப்.தொண்டன், 2ஆம் லெப். சேரன் ஆகிய இரு மாவீரர்களின் தந்தை க.இராஜரட்ணம் தேசியக் கொடி ஏற்றுகிறார்.....

## இராட்சத ராணுவ உருவத்தை பிய்த்து எறிந்தனர் மக்கள்!

யாழ்ப்பாணம்,ஒக்.1

நேற்றைய பொங்கு தமிழ் எழுச்சி நடைபெற்ற மருத்துவபீட மைதானத்தில் இராணுவ ஆக்கிரமிப்பை எடுத்துக்காட்டுகின்ற சின்னமாக இராட்சத உருவம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது.


இராணுவ உடை தரித்த - துப்பாக்கி ரவைகள், குண்டுகளைக் கட்டியிருந்த நிலையில் அந்த இராட்சத உருவம் காணப்பட்டது. அதன் உயரம் சுமார் 30 அடிக்கு மேல் இருக்கும்.

நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் உணர்ச்சி மேலீட்டினால் மக்கள் ஆவேசத்துடன் எழுந்து அந்த இராட்சத உருவத்தை பிய்த்தெறிந்து துவம்சம் செய்தனர். இராணுவ உருவத்தைத் துண்டு துண்டாக - கைவேறு கால் வேறாக - பிரித்து சுக்குநூறாக்கினர்.

சிதைந்து போய் வீழ்ந்து கிடந்த அந்த உருவத்தின் மீது ஏறி நின்று ஆனந்தக்கூத்தாடினர். அந்தச் சம்பவம் பார்த்திருந்த அனைவரையும் உணர்ச்சியடையச் செய்தது.

(ஐ-த-9-7-12-13-190)

மேலும் படங்கள், செய்திகள்
2ஆம், 3ஆம் 18ஆம் பக்கங்களில்....



பொங்கு தமிழ் சுடரை அரச அதிபர் கே.கணேஷ் ஏற்றுகிறார்....



மாவீரர் மேஜர் முரளியின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை லட்சுமி பொதுச் சுடரை ஏற்றுகிறார்.....

## மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் வரிக்குவரி சு.க. கொள்கைப்படிதான்!

### அடித்துக் கூறிவிட்டார் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.1

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வரிக்குவரி சுதந்திரக் கட்சியின் தற்போதைய கொள்கைப்படிதான் அமைய வேண்டும். அரசியல் நோக்கங்களுக்காகக் கட்சியை இனவாதப் படுகுழிக்குள் தள்ள அனுமதிக்க முடியாது."

-இப்படித் திட்டவட்டமாக அறிவித்து விட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்று கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவை அவர் உறுதிப்படுத்தினார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் வரிக்குவரி கட்சிக் கொள்கையைப் பிரதிபலிப்பதாக அமைவதோடு, அந்த விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டதும் அது கட்சியின் மத்திய குழுவினால் அங்கீகரிக்கப்படவும் வேண்டும் என்றும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கு பிரதமர் தலைமையில் 9 பேர் கொண்ட குழு ஒன்றும் நேற்றைய கூட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய

(18ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் தலைமையிலான குழுவே தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும்


கொழும்பு, ஒக்.1

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தின்போது இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





இராணுவ ஆக்கிரமிப்பின் குறியீடாக நிறுவப்பட்ட இராட்சத உருவத்தை முதல் படத்திலும் மக்கள் அதனைச் சிதைப்பதையும் அது சாய்ந்து வீழ்வதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் : பகீரதன்,பிரபா)



# உண்மை நிலையை ஐரோப்பிய ஒன்றியம் புரிந்துகொள்ளும் நாள் விரைவில் வரும்!

## 'பொங்கு தமிழில்' அடித்துக் கூறினார் சந்திரசேகரன்



யாழ்ப்பாணம்,ஒக்.1

உலகமும் ஐரோப்பிய ஒன்றியமும் எமது உரிமைப் போராட்டத்தைப் புரிந்து கொள்ளாமல் எங்களுக்குப் பயங்கரவாதிகள் என்ற பட்டத்தைச் சூட்டுகின்றன. ஆனால், இந்த விடயத்தில் உண்மை நிலை என்ன என்பதை ஐரோப்பிய ஒன்றியம் புரிந்துகொள்ளுகின்ற நாள் வெகுவிரைவில் வரும்.

இவ்வாறு தெரிவித்தார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன். நேற்று நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர்கள் இன்று சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். தமது சொந்த மண்ணில் உரிமையோடு வாழ்வதற்கு - சுயநிர்ணயத்தோடு வாழ்வதற்குத் தமிழர்கள் விரும்புகிறார்கள்; இதனைச் சர்வதேச சமூகம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையிலேயே கொழும்பில் வாழ்கின்ற தமிழர்களாக இருந்தாலும் சரி மலையகத்திலே வாழ்கின்ற தமிழர்களாக இருந்தாலும் சரி, அவர்களது சுதந்திரம், இருப்பு எல்லாமே வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களுடைய சுதந்திரத்திலும் விடுதலையிலும்தான் தங்கியிருக்கிறது.

தமிழர்களின் விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துப் போராடிக் கொண்டிருக்கின்ற தேசியத் தலைவர் பிரபாகரன் வடக்கு - கிழக்கு தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, மலையகத் தமிழர்களுக்கு மாத்திரமல்ல உலகத்திலே இருக்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் அவர்தான் தலைவர். தேசியத் தலைவர் பிரபாவுக்குப் பின்னால் அணி திரள்வதற்கு இப்போது மலையகத் தமிழர்களும் தயாராகி விட்டார்கள்.

எமது போராட்டத்தைச் சர்வதேசம் பயங்கரவாதம் என்கிறது. தமிழர்களைப் பயங்கரவாதிகள் என்று உலகம் ஒதுக்கிவைக்கிறது.

அண்மையில் கூட ஐரோப்பிய ஒன்றியம் தமிழர்களைப் புறக்கணித்து அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

நாங்கள் எங்களுடைய மக்களுக்காக - மக்களின் எதிர்கால வாழ்வுக்காகச் சிந்திக்கின்றோம். தமிழர்கள் இந்த நாட்டிலே சுதந்திரமாக வாழ விரும்புகிறார்கள். மற்றவர்களுக்கு அடிமைகளாக வாழாமல் தன்மானத்தோடு வாழத்தான் நாம் விரும்புகின்றோம். அதற்காகத்தான் போராடுகிறோம். இதனைச் சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும்.

அடிமையற்ற வாழ்வுரிமைக்காகப் போராடுவதற்காகச் சர்வதேசம் எங்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தினால் அந்தப் பயங்கரவாதிகள் பட்டத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

ஐரோப்பிய ஒன்றியம் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். எங்களைப் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியதற்காக நாங்கள் கவலைப்படப் போவதில்லை. எவருக்கும் நாம் அஞ்சமாட்டோம் உலகத்திற்கே முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டுவோம் - என்றார்.

(ஐ-த-9-7-12-13-410-190)

# துண்டுப் பிரசுரம் மக்களை மிரட்ட மு

நேற்று நடைபெற்ற மாபெரு
தமிழ் எழுச்சி நிகழ்வை குழப்பு
சக்திகள் முயற்சி செய்தன. இ
மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்க
சாமல் மக்கள் அலைகடலெனத் தி
உணர்வுகளை வெளிப்படுத்தின

பொங்குதமிழ் நிகழ்வில் கலந்
வேண்டாம் என்று தெரிவிக்கும் து
சுரங்கள் ஆங்காங்கே சில இடங்கள்
பட்டிருந்தன.

பொங்கு தமிழ் நிகழ்வு யுத்
தயார்படுத்தல் என்றும் - எனவே
கள் எவரும் கலந்துகொள்ள க
றும் அந்தத் துண்டுப் பிரசுரங்
தல் விடுக்கப்பட்டிருந்தது.

# தனிநாடு கோருவதைத் தவ தமிழருக்கு வேறு வழியில்லை

## மனோ கணேசன் எம்.பி. கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.1

உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தீர்வு காண்பதற்கு சிங்கள தேசம் முன்வரும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை. இந்த நிலையில் தமிழர்கள் தனிநாடு கோருவதைத் தவிர வேறுவழியில்லை.

-இப்படிக் கூறினார் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். நேற்று யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மனோ கணேசன் அங்கு மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். அவர்களுக்கென மரபுவழித் தயாகமுண்டு. சுயநிர்ணயஉரிமை உண்டு. இவற்
கொள்ள சிங்களப் பேரினவாதம்
தும் மறுக்குமானால் தமிழ் மக்கள்
டுப் பிரகடனத்தை வற்புறுத்துவ
வேறு வழி இருக்கமுடியாது.

தமிழ மக்களுக்கென்று தனிநா
உருவாகும் பொழுதே அவர்க
உரிமைகளும் சுதந்திரங்களும் பாதுக
முடியும் அதனை வலயுறுத்தியே
கிழக்கில் மாவட்ட ரீதியாக தமிழர்க
திரண்டு வருகிறார்கள். தமிழ் ம
அபிலாஷைகள் நிறைவேறுவதற்
மாகாணமக்கள் முன்னணியும் ஒ
உழைக்கும்

- இப்படி மனோ கணேசன் கூறி

(ஐ-த-9-7-12-13-4

# இத்தகைய மக்கள் எழுச்சியை என்றுமே நான் கண்டதில்லை!

## மலைத்துப் போனாராம் வெள்ளைக்காரப் பெண்!



இவ்வளவுக்கு சுதந்திரதாகம் கொண்ட மக்கள் வெள்ளத்தை எனது வாழ்நாளில் ஒருபோதும் நான் கண்டதில்லை. இந்த மக்களின் எழுச்சியையும் உணர்ச்சியையும் கண்டு மலைத்துப் போய்விட்டேன்.

- இப்படி எமது செய்தியாளரிடம் தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்திக் கொண்டார் லண்டனைச் சேர்ந்த அரங்கியல் ஆய்வாளர் ஜெனி (Gene).

நேற்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெற்ற 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அவர் மேலும் கூறுகையில் -

ஓர் எழுச்சி நிகழ்வொன்றில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டிருப்பதைக் காண மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கலந்துகொண்டுள்ள மக்களின் வெளிப்பாடுகள் மிகவும் உணர்வுபூர்வமானவையாக உள்ளன 'மக்களின் சக்தி மாபெரும் சக்தி' என்பதை இங்குதான் நேரில் அறிந்துகொள்கிறேன்.

இவ்வளவு மக்களும் இங்கு திரள்வதற்கு மிகவும் உயரிய விலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த உயரிய விலையின் பெறுமதியை நான் இங்கே மக்கள் எழுச்சியாக காண்கிறேன்.

- இப்படி அவர் கூறினார்.

(த-7-9-12-13)

# இராணுவ முகாமை நோக்கி மக்க ஆவேசத்துடன் ஓடிவருவார்கள

## பதற்றத்துடன் இப்படி விசாரித்த பொலீ

யாழ்ப்பாணம்,ஒக்.1

பொங்கு தமிழ் நிகழ்வு இடம்பெற்ற யாழ்.பல்கலைக்கழகத்தைச் சுற்றிவர - பிரதான வீதிகளில் வழமையை விட நேற்று இராணுவத்தினரும் பொலீஸாரும் சற்று அதிகளவில் நிறுத்தப்பட்டிருந்தனர். எனினும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

இருப்பினும் மக்கள் ஆத்திரம் கொண்டு தங்கள் மீது தாக்குதல் ஏதும் நடத்துவார்களா என்ற அச்சமும் படையினரிடம் காணப்பட்டது.

நிகழ்வு நடந்துகொண்டிருந்த போது- 4.30 மணியிருக்கும் - 'உதயன்' செய்தியாளர்கள் மருத்துவபீட மைதானத்திலிருந்து பிறவுண் வீதி வழியாக உதயன் அலுவலகத்துக்கு வந்துகொண்டிருந்தனர். அப்போது பல்கலைக்கழகத்துக்குச் சமீபமாக அமைந்துள்ள ஒரு காவலரணில் இருந்த
அலுவலர் ஒருவர் அவர்களை வழி

அந்தப் பொலீஸ் அலுவ
செய்தியாளர்களிடம் கேட்ட வி
இவைதான் -

✱ எத்தனை மணிக்குப் பொ
முடிவடையும்?

✱ பொங்கு தமிழ் முடிவடை
இருக்கின்ற மக்கள் எல்லோரும்
டன் இராணுவ முகாமுக்கு ஓடி
களா?

✱ இராணுவத்துடனும் பொலீ
ஏதேனும் பிரச்சினைகளில் ஈ
களா?

✱ காவலரண்களை எரிக்கி
கதைக்கின்றார்களா?

(த-9-13-7-12-

மைதானத்தில் அமர்ந்திருந்த மக்கள் திரளில் ஒரு பகுதி.



(படம் : பகீரதன்)



அரங்குக்கு எடுத்துவரப்பட்ட
மற்றொரு 'கட்அவுட்'




பொங்கு தமிழில் பார்ப்போரைக் கவர்ந்த தலைவரின் பிரமாண்டமான
32 அடி உயர கட் அவுட்.......



மக்கள் எழுச்சியின் மத்தியில்
மதத் தலைவர்கள்



அமர்ந்திருக்கும் அரசியல்
பிரமுகர்கள்



அனைத்துக் கரங்களிலும்
தேசியத் தலைவரின் படங்கள்...

படங்கள்:- பிரபா, கவிதரன், அற்புதன், ரமணன், பகீரதன்



தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பினர்...



அரச அதிபர், துணைவேந்தர்
மற்றும் பிரமுகர்கள்....



முஸ்லிம் மதத்தலைவர்களும்
வந்து அமர்ந்திருந்த காட்சி...

# தமிழர் மீது போரைத் திணிக்கும் அரசின் முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு பெரும் உந்துதல்!

## நிலைமைகளைப் புரிந்துகொண்டு நிலைப்பாட்டை மாற்றக் கோருகிறது 'பொங்கு தமிழ்' பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

விடுதலைப் புலிகளின் தூதுக் குழுக்களின் பயணங்களுக்குத் தடைவிதித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த தீர்மானம் தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு போரைத் திணிக்க ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு உந்தல் அளிப்பதாக உள்ளது.

இலங்கையில் உருவாகியுள்ள போர்ச் சூழல் மாற்றப்படவேண்டுமாயின் ஐரோப்பிய ஒன்றியம் தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வில் விடுக்கப்பட்ட பிரகடனம் இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு:-

தென்னிலங்கையில் இன்று பயங்கரமான சிங்கள பௌத்த பேரினவாதம் தலை விரித்தாடுகின்றது. இது தமிழ் பேசும் மக்களின் சனநாயக வழியில் அமைந்த எந்த வொரு தீர்வுக்குமான கதவுகளையும் முற்றாக மூடியுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகத்தில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்று அடைந்துள்ள அவலமானதும், ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தையும் அங்கீகாரத்தையும் கோருகின்றோம்.

தமிழ் பேசும் மக்களாகிய நாம் இலங்கைத்தீவினை ஐரோப்பியர் ஆக்கிரமிக்க முன்னர் தனியரசாக இருந்து வந்துள்ளோம். 1833 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கையில் ஒற்றையாட்சி முறையைப் புகுத்திய போது தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. அப்பொழுது அது தன் இறைமையை இழந்தமையும் அதன்பின் 1948 இல் இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியபோது தமிழ்பேசும் மக்களின் இறைமையை எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருந்த சிங்களவரிடம் ஒப்படைத்துச் சென்றதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

இவ்வாறு சிங்கள சமூகம் முறையற்ற

(14 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2005

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் வெற்றிடமாகவுள்ள கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2005.10.18 ஆகும்.

| பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. சமூக சேவை உத்தியோகத்தர் வகுப்பு II | 08 |
| 2. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் வகுப்பு II | 13 |
| 3. முகாமைத்துவ உதவியாளர் (கைத்தொழில்) | 83 |
| 4. கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II | 28 |
| 5. சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வகுப்பு II | 21 |
| 6. மருத்துவ ஆவண உத்தியோகத்தர் | 23 |

குறிப்பு :-
சேவையின் தேவையினைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் ஆணைக்குழுவிற்குரியதாகும்.

**02. ஆள்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

I.அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானது. பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் தங்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியம் பெற உரிமை உண்டு. ஏற்கனவே, ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யும் பட்சத்தில் அவர் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு, விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குத் தொடர்ந்து பங்களிப்புத் தொகையினை செலுத்தவேண்டும்.

II.இது ஓர் இடமாற்று சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அத்துடன் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05 வருடங்கள் சேவையாற்றவேண்டும்.

**03. பொதுத் தகைமைகள் :**

அ.விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ.சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ.விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

ஈ. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும. அதாவது இவ் விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில வசித்திருத்தல் வேண்டும்.

உ.பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது பொதுத் தகைமைகளையும், விண்ணப்பிக்கும் பதவிக்குரிய கல்வித் தகைமைகளையும் நிரூபித்தல் வேண்டும்.

1. வாக்காளர் இடாப்பின் பிரதி
2. வதிவு தொடர்பான கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்.
3. நற்குணச் சான்றிதழ்.
4. பிறப்புச் சான்றிதழ்.
5. கல்விப் பெறுபேற்றுச் சான்றிதழ்.
6. அடையாள அட்டை.

குறிப்பு:
வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரணச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறெனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

**04. ஆள்சேர்ப்பு முறை:**

எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும் ஆள்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கும், தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கும் அமையவும் ஆள்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரிசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவந்தால் இப் பதவிக்கான உரிமைகள் ரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடத்துவது, கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

குறிப்பு:

1.இவ்விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன் கல்வித்தகைமைக்குரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். (பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

2.ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்கு குறையாமல் பெறப்படுதல் வேண்டும் எனினும் இப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் திறமை அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கப்படும்.

**05. பரீட்சைக் கட்டணம்:**

விண்ணப்பதாரி வதியும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200/- ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன், எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல்வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீடசைக் கட்டணமான ரூபா 200/- ஐச் **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை** என்ற பெயருக்கு காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்கும் முறை :**

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களை தயாரித்தல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தான் விரும்பும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். அத்துடன், திறந்த போட்டி பரீட்சை, மட்டுப்படுத்தப்பட்ட போட்டி பரீட்சை ஆகிய இரண்டிற்கும் விண்ணப்பிக்கத் தகுதியுடைய விண்ணப்பதாரி ஒருவர் ஒவ்வொரு பரீட்சைக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திலும் ரூபா 200/= ஐச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை ஒட்டியனுப்புதல் வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் 2005.10.18 ஆம் திகதிக்கு முன்னர் **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல.:35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை** என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

எவரேனும் விண்ணப்பதாரி ஒருவருக்குத் தமது அனுமதி அட்டை எழுத்துப் பரீட்சைக்கு குறைந்த பட்சம் ஏழு நாள்களுக்கு முன்பாவது கிடைக்காவிடின், அதனைப் பற்றி உடனடியாக மேலே தரப்பட்ட முகவரிக்கு அறிவித்தல்வேண்டும்.

**07. பரீட்சை நடத்துவதற்கு உத்திதேசிக்கப்பட்ட பிரதான பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:**

| நகரம் | | எண் | நகரம் | | எண் |
|---|---|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | - | 1 | 6. திருகோணமலை | - | 6 |
| 2. மன்னார் | - | 2 | 7. மட்டக்களப்பு | - | 7 |
| 3. வவுனியா | - | 3 | 8. அம்பாறை | - | 8 |
| 4. கிளிநொச்சி | - | 4 | 9. கல்முனை | - | 9 |
| 5. முல்லைத்தீவு | - | 5 | | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்னப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

## I. சமூக சேவை உத்தியோகத்தர்

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,080 - 1 x 2,460 - 11 x 3,480 - 173,82)/= (TB-3-6)

**கல்வித்தகைமை :**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்.

அல்லது

ஆ)க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை சமூக சேவை பாடசாலையினால் வழங்கப்பட்ட இரண்டு வருட சமூக சேவை டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ) அரச சேவையிலோ அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றிலோ பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் திருப்திகரமான 07 வருட சேவையைப் பூர்த்திசெய்திருப்பதுடன், க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் சித்தியெய்தியவர்ாகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஈ)அரச சேவையிலோ அல்லது அரச கூட்டுத்தாபன மொன்றிலோ பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் திருப்திகரமான 10 வருட சேவையை பூர்த்திசெய்திருப்பதுடன்,

(I)சிரேஷ்ட கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையில் நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(II)க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியும், ஒரே அமர்வில் ஐந்து பாடங்களுக்கு குறையாத சித்தியும் கொண்டு, சிங்களம் / தமிழ், எண்கணிதம் / பிரயோக கணிதம் / கணிதம் / வர்த்தக எண்கணிதம் ஆகிய இரு பாடங்கள். உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

## II. கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,080 - 1 x 2,460 - 11 x 3,480 - 173,820/= (TB-3-6)

**கல்வித்தகைமை :**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

ஆ)க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை சமூக சேவை பாடசாலையினால் வழங்கப்பட்ட இரண்டு வருட டிப்ளோமா சான்றிதழ் அல்லது இலங்கை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட சமூக அபிவிருத்தி தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் அல்லது விவசாய பாடசாலையினால் வழங்கப்பட்ட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

இ) அரச சேவையிலோ அல்லது அரச கூட்டுதாபனமொன்றிலோ பணியாற்றும் உத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

## ‘பொங்குதமிழ்’ எழுச்சி எதற்காக?

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தும் தமிழர்களின் எழுச்சிப் பிரகடனம் நேற்று யாழ். நகரில் ‘பொங்குதமிழ்’ நிகழ்வின் ஊடாக ஓங்கி ஒலித்திருக்கிறது.

அதேசமயம், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அணி சேர்ந்திருக்கும் சிங்கள - பௌத்த பேரின அமைப்புகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய, தமிழரின் சுயநிர்ணய உரிமை விவகாரம் தொடர்பான ஒரு தகவலை வெளியிட்டிருக்கின்றது.

“ஒற்றையாட்சிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு, வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் தனித்துவமான தாயகம் அல்ல” - என்பன போன்ற தமது நிபந்தனைகளை பிரதமர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கியிருக்கிறார் என்பதே அத்தகவல்.

நல்லது. நாட்டை ஆளும் தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகளின் தீர்மானமும், முடிவும் இந்தக் கொள்கைக் கோட்பாடுகளின் போக்கில்தான் அமையப்போகின்றன என்றால், ஈழத்தமிழர்கள் தமது அரசியல் எதிர்காலம் தொடர்பாகத் திட்டவட்டமான சில முடிவுகளை எடுக்கவேண்டிய வரலாற்றுத் திருப்ப நிலைக்கு வந்துவிட்டார்கள் என்றே அர்த்தம்.

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாநிலத்தில் வசிக்கும் தமிழ்மக்கள் தனித்துவமான மொழியையும், பண்பாட்டையும், பாரம்பரியத்தையும், தனித்துவமான வரலாற்றையும், தொடர்ச்சியான வாழ்விட நிலப்பரப்பையும் (தாயகத்தையும்), தனித்துவமான பொருளாதார வாழ்வையும் கொண்டிருப்பவர்கள். அதற்கு மேலாக, தாம் தனித்துவமான மக்கள் சமூகம் என்ற விழிப்புணர்வையும் கொண்டிருப்பதால் ஒரு தேசிய இனமாக அமையப்பெற்றிருக்கின்றார்கள். ஒரு தேசியக் கட்டமைப்புக்கான எத்தகைய அகநிலை, புறநிலை பண்பியல்புகள் இருக்கவேண்டுமோ அவற்றை வடக்கு - கிழக்கு வாழ் ஈழத் தமிழர்கள் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் பூர்வீக மண்ணில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளாக இடையறாமல் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இந்தப் பிரதேசம் தமிழர்களது வரலாற்றுத் தாயகமாகும். அந்நிய குடியேற்ற வல்லரசுகள் இலங்கையில் ஊடுருவித் தமிழரின் இறையாண்மையை - அரசாண்மையை - பறித்தெடுப்பதற்கு முன்னராக, தமிழ்மக்கள் தமது சொந்த இராச்சியத்தில், சொந்த அரசை நிறுவி அரசாட்சி புரிந்துவந்தனர். எனவே, சொந்த வரலாற்று மண்ணில், ஒரு தேசிய இனக் கட்டமைப்பாக வாழும் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அதை எவரும் மறுக்கமுடியாது.

தேசிய இன அமைப்பைக் கொண்ட ஒரு மக்கள் சமூகம் தனது அரசியல் தகைமையையும், தலைவிதியையும் சுதந்திரமான முறையில் தானே நிர்ணயித்துக் கொள்ளும் உரிமையைச் சர்வதேச சட்டமு[illegible]மைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் அமையக் கொண்டுள்ளது.

இந்த அடிப்படை நிலைப்பாட்டைப் புரிந்துகொண்டும் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மறுத்துவருவதே இன்றைய அரசியல் குழப்பங்களுக்கு அடிப்படை.

தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பான இந்தக் கோட்பாட்டுக்குத் தர்க்கங்கள் முதன்முதலில் - தெட்டத்தெளிவாக - முன்வைக்கப்பட்டது 1985 ஜூலையில் திம்புப் பேச்சுகளின் போதாகும்.

தமிழினம் தனித்துவமான தேசியக் கட்டமைப்பைக் கொண்டது; அதற்குத் தனித்துவமான தாயகம் உண்டு; அந்தத் தேசத்திற்கு எவராலும் பிரித்தெடுக்க முடியாத சுயநிர்ணய உரிமை உண்டு. - என்ற இந்த மூன்று அம்சங்களையும் தென்னிலங்கைச் சிங்களத் தலைமைகள் அப்போது ஏற்றுக்கொள்ளமறுத்தன.

ஆனால், 1987 ஓகஸ்ட் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் திம்புக்கோட்பாட்டின் முதல் இரு அம்சங்களும் தென்னிலங்கைத் தலைமையால் ஒப்புக்கொள்ளப்பட்டன.

பின்னர் 2002 இறுதியில் ஒஸ்லோ இணக்கப்பாட்டிற்கு அமைய மூன்றாவது அம்சமான - தமிழ் இனத்துக்கு சுய நிர்ணய உரிமை உண்டு என்ற விவகாரம் - தென்னிலங்கை அரசுத் தலைமையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவ்வளவும் முடிந்த பின்னர்தான் பேரினவாதம் மீண்டும் பழைய பல்லவியை பாடத் தொடங்கியிருக்கின்றது. அதனால் தான் ‘பொங்குதமிழ்’ போன்ற எழுச்சி நிகழ்ச்சிகளை நடத்தித் தமது உரிமைகளையும் அவற்றின் அடிப்படையில் அமைந்த - நியாயமான எதிர்பார்ப்புகளுடன் கூடிய - தமது அபிலாஷைகளையும் தமிழர்கள் வெளிப்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகள் மற்றும் உரிமைகள் தொடர்பான விடயத்தில் தென்னிலங்கைத் தலைமைகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, நீதியான விட்டுக்கொடுப்புகளுடன் இணங்கிப் போவதற்கும், நிலையான - நிரந்தரமான - சுமூகத்தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் முன்வரவேண்டும். அப்படியில்லாமல் தமிழர்களின் உரிமைகள் தொடர்பான விடயத்தில் தொடர்ந்தும் விதண்டாவாதம்பேசி, பிடிவாதம் காட்டி விட்டேத்தியாக அவை நடக்குமானால் ‘பொங்கி எழும்’ தமிழர்களின் இப்போதைய போக்கு மாற்ற முடியாததாகப் போகும்.

# மாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் செவ்வாயன்று இசை நடன, நாடக விழா

## யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் இசை, நடன, நாடக விழா எதிர்வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்புவிருந்தினராக யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகன்றாஸ், வடமராட்சி தென்மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலர் சி. திருவாகரன், வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடமராட்சி வடக்குப் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், நெடுந்தீவு மற்றும் யாழ்ப் பாணப் பிரதேச செயலர் எம்.பற்றிக் டிறஞ்சன், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பிரதேச செயலர் ஆர்.ரீ.ஜெயசீலன், வலிகாமம் வடக்கு தெல்லிப்பழைப் பிரதேச செயலர், சு.முரளிதரன், தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் ஆகியோர் கலந்துகொள்வர்.

மங்கள விளக்கேற்றல், தமிழ்த்தாய் வணக்கம், வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தலைமையுரையையும் யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினர் உரையையும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளாக கரவெட்டிப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை வழங்கும் ‘தமிழின் அழகு’ குழு நடனம், கரகாட்டம், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக கலாசார சபை வழங்கும் கிராமியப் பாடல், ‘ஊதாரி மைந்தன்’ நாட்டுக்கூத்து, காரைநகர் பிரதேச செயலக கலாசார சபை வழங்கும் ஒயிலாட்டம் -

தெல்லிப்பழைப் பிரதேச செயலக கலாசார சபை வழங்கும் குழு நடனம், யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி வழங்கும் தனி நடனம், மாணவிகள் வழங்கும் கிராமிய நடனம், நல்லூர் பிரதேச செயலக கலாசார சபை வழங்கும் புதிய படைப்பு நடனம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வழங்கும் ‘மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்’ நாடகம், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் வழங்கும் ‘பூதத்தம்பி’ இசை நாடகம் என்பன இடம் பெறும். நிகழ்வின் இறுதியில் வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி நன்றியுரை நிகழ்த்துவார்.

(எ-202-203)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்



குடத்தனை,ஒக்.1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தத் திருவிழா தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி வெண்ணைத் திருவிழாவும் 11ஆம் திகதி துகில் திருவிழாவும் 12ஆம் திகதி பாம்புத் திருவிழாவும் 13ஆம் திகதி கம்சன் போர்த் திருவிழாவும் 14ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 15ஆம் திகதி சப்பரத்திருவிழாவும் 16ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 17ஆம் திகதி சமுத்திரத் தீர்த்தமும் 18ஆம் திகதி கேணித் தீர்த்தமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும்.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்களின் நலன்கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறை - மந்திகை ஊடாக வல்லிபுரக்கோயில் -

பருத்தித்துறை - தும்பளை ஊடாக வல்லிபுரக்கோயில் -

யாழ்ப்பாணம் - வல்லிபுரக்கோயில் ஊடாகப் பருத்தித்துறை போன்ற அடிப்படையில் பஸ் சேவை நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-78-208-70-173)

# அளவெட்டிப் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து இளைஞர் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.1

அளவெட்டிப் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து இளைஞர் ஒருவர் மீட்கப்பட்டார். இவர் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மாவட்ட வைத்திய அதிகாரி சி.சிவராணி தெரிவித்ததாவது:-

அளவெட்டிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி நடைபெறுகிறது. இப்பணியில் ஈடுபடுபவர்கள் அங்குள்ள கிணறு ஒன்றினுள் சுமார் 18 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் இருப்பதை அவதானித்தனர். அவரை மீட்டு கிராம சேவையாளர் ஊடாகத் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்தனர்.

அந்த இளைஞர் நீண்டகாலமாகக் கிணற்றினுள் சிக்கியிருந்தவர் போன்று பலவீனமாக உள்ளார். அவரால் சரளமாகப் பேசமுடியவில்லை. தனது பெயர் திலேஷ் என்றும் சொந்த இடம் ஊர்காவற்றுறை என்றும் கூறுகிறார்.

இவருக்கு தற்போது சிகிச்சை வழங்கப்படுகின்றது. இவரது உறவினர், நண்பர்கள் அல்லது தெரிந்தவர்கள் தெல் லிப்பழை மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

(ஒ)

# ‘மகிழ்களம்’ கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.1

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களின் ஆக்கத்திறன் விருத்தியை எடுத்தியம்பும் ‘மகிழ்களம்’ கண்காட்சி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் இரு கட்டங்களாக தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடமராட்சி கல்வி முகாமைத்துவப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், தும்பளை கிழக்கு சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் ஆ.கணபதிப்பிள்ளை, மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு இணைத் தலைவர் டாக்டர் ஆர்.சுவேந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், சிறுவர் பாதுகாப்பு நிதிய பங்காளர் மேம்பாட்டு முகாமையாளர் ஏ.பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இதில் உளசமூக மேம்பாட்டு செயற்றிட்டத்தில் ஈடுபடுகின்ற 6 முகாம்களைச் சேர்ந்த சிறுவர்களின் ஆற்றுகை, கற்பனைத் திறன்களைக் கொண்டு அமைக்கப்பட்ட பௌதிக வளங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இசைக் கருவிகள், கற்பனையில் உருவாக்கப்பட்ட உருவங்கள், ஒட்டுச் சித்திர வடிவமைப்புகள் என்பன காட்சிக்கு வைக்கப்படும்.

ஆற்றுகை செயற்பாடுகளாக பொம்மலாட்டம், மந்திரக்குகை, மாஜாஜால விளையாட்டு, சிறுவர் கலைத்திறன்களை வெளிக்கொணரும் நிகழ்வுகள் இடம் பெறும்.

(எ-204)

**நாளை**

புரட்டாதி 16
ஞாயிற்றுக்கிழமை
02.10.2005
திதி: சதுர்த்தசி
பிற்பகல் 03.09 வரை
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு 04.53 வரை
சுபநேரம்: 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02
(யாவும் பழைய நேரப்படி)

# வாகன ஆவணங்களுக்கு விண்ணப்பித்தோருக்கு!

யாழ்ப்பாணம், ஒக்.1

கரவெட்டி பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் உடைமை மாற்றம் உட்பட வாகன ஆவணங்கள் பெற விண்ணப்பித்தவர்களில் இதுவரையும் சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவுச்சான்றிதழ் போன்றவை கிடைக்கப் பெறாதவர்கள் இதுதொடர்பான ஆவணங்களின் பிரதிகளுடன் எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதுவரை கிடைக்கப் பெறாத வாகன ஆவணங்கள் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகவே இத்தகவல் பெறப்படுகின்றது எனக் கரவெட்டிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(ஒ-202)

# கணனி மென்பொருள் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு - கிழக்கில் உள்ள அரச திணைக்களங்களில் மொழிபெயர்ப்புப் பிரச்சினையை நிவர்த்திசெய்யும் நடவடிக்கையாகக் கணனி மென்பொருள் பயன்படுத்தப்படவுள்ளது.

இதில் ஒரு கட்டமாக நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் அரச அலுவலருக்கு மென்பொருள் அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜாவின் அனுசரணையுடன் யாழ். செயலக மாவட்டத் திட்டமிடல் செயலகம் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. ஆங்கிலம், தமிழ் மொழி பெயர்ப்பை இலகுபடுத்தும் இந்தக் கணனி மென்பொருள் அறிமுகவிழாவில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களையும் சேர்ந்த கணனிப் பயிற்சிபெற்ற அலுவலர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர்.

(எ-202-203)

**உதயவாக்கு**

பிறரது குற்றத்தைப் பற்றி ஒரு போதும் பேசாதே. அவை எவ்வளவு கெட்டவை ஆனாலும் சரி, அதனால் எந்தப் பயனும் விளைவதில்லை.

- சுவாமி விவேகானந்தர்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் சொந்தப் பாவிப்பில் உள்ள (L.M.L Seleat) ஸ் கூட்டர் சகல ஆவணங் களுடன் விற்பனைக்குண்டு.G.K தொடர் இலக்க முடையது. தொடர்பு: நா.ஜெயனொளிபவன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (40563)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதி, வாசிக சாலைக்கு அருகில் 1¼ பரப்புக் கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S. நாதன் 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (40567)

கல்வியங்காடு இராசவீதி, கோப்பாய் தெற்கில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் இருந்து ¼km தூரத்தில்) வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும் உகந்தது. தொடர்பு: தயாளன், மே/பா. தயா ஸ்ரோர்ஸ் G.P.S. வீதி, கல்வியங்காடு T.P.: 0776904378. (40578)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

German Shepherd (அல்சேசன்), Dachshurd, Dobermann கலப்பு நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபால சிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39657)

## வீடு வாடகைக்கு

கல்வியங்காடு ஞான பாஸ்கரா சனசமூக நிலையத்திற்கு அருகில் 3 அறைகள் உடைய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 077 3164320. (40588)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பலாலி வீதியில், சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: T.P.No. 0776087896. (40554)

## வாடகைக்கு

கோயில் வீதி, நல்லூரில் 3 அறைகள் பெரிய Hall மற்றும் சகல வசதிகளுமுடைய கீழ்தள வீடு வாடகைக்குண்டு. 3 அல்லது 4 பேர்களைக் கொண்ட குடும்பத்தினர் விரும் பத்தக்கது. தொடர்பு: 393/17, கோயில் பின்வீதி, நல்லூர். T.P. 222 6461. (40557)

## மோட்டார் சைக்கிள், கார் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இருபாலாருக்கும் மோட்டார் சைக்கிள், மோட்டார் கார் வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் குளிரூட்டப்பட்ட திருமணக் காரும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 360/10, பிரதான வீதி, (பஸ்தியான் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். 0773222999, 077 6991899. (40087)

## தாதி பயிலுநர் தேவை

**எமது வைத்திய நிலையத்தில் பணிபுரிய தாதி பயிலுநர்கள் தேவைப்படுகின்றனர். சங்கானைக்கு அண்மையில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தோர் விரும்பப்படுவர்.**

தொடர்பு:

**கருணா கிளினிக்**

பிரதான வீதி, சங்கானை.

(40503) (21.19)

## தூரிகை
## 10 வருட அனுபவ சேவை

மகளிருக்கான பயிற்சிகளின் புதிய பிரிவுகள்

தையல், கேக் ஐசிங், Hair style பெயின்ரிங்... இவற்றுடன் 10 இற்கு மேற்பட்ட சிறு தொழில் பயிற்சிகளும்

'மணப்பெண் அலங்கரிப்பு'

செயன்முறை அரங்கும் இடம்பெறும்

ஆரம்பம் 03-10-2005

**Organ** வகுப்பு [நெல்லியடி]

வெள்ளி பிற்பகல் 3.00 மணிக்கு

- சனி, ஞாயிறு/வாரநாள் இரு பிரிவு
- இரண்டு மாதப் பயிற்சிகள் முடிவில் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**தூரிகை**

ம.ம.வி.வீதி, நெல்லியடி. | செங்குந்தா வீதி, கல்வியங்காடு.

## கடைகள் வாடகைக்கு வழங்குதல்

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஏழு கடைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:

**சி.ரூபாவதி**

(40598) 021-222 5801, 077 6943470 (21.16.18)

## ஆள்கள் தேவை

மருந்தகத்தில் பணிபுரிவதற்கு ஆள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களும் அருகில் இருப்பவர்களும் விரும்பத்தக்கது.

**ஜனனி மருந்தகம்**

ஆனைக்கோட்டைச் சந்தி, ஆனைக்கோட்டை

(40566) (21.16.18)

## MOON BEAUTY CARE

*இன் விசேட சலுகை*

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றும் யுவதிகளுக்காக இச்சலுகை வழங்கப்படுகின்றது.

- Face Clear up
- Eye brow shapping
- Saree drape
- Simple makeup

*கட்டணம் 2500/= மட்டுமே*

skin *தன்மைக்கு ஏற்ற* facials *செய்துவிடப்படும்.*

*கட்டணம் 1200/= மட்டும்*

*முக்கியகுறிப்பு. பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.*

Personal Grooming Class

(பெண்கள் தங்களின் சரும கேச பராமரிப்பை தாங்களே மேற்கொள்வதற்கான பயிற்சி).

*கட்டணம் 4500/= ஆரம்பமாகின்றது.*

*மேலதிக விவரங்களுக்கு*

**திருமதி B. அகிலா**

*0777 570138* (Dip.in.Beauty culture, Dip.in.Dance)

*இல.92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். (சனி, ஞாயிறுகளில் சந்திக்கலாம் (9.30-12.30)*

(40575) (21.16.18)

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.1

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியில் பெற்றோர் தினவிழாவும் பாடசாலை தினமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி மரியரொசாரிய தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிலாராட் கலந்து கொள்வர்.

(3-ரி-11)

## அறுவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,ஒக்.1

சரசாலை தெற்குப் பகுதியில் வீடொன்றில் அத்துமீறிப் பிரவேசித்து அங்கிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் உட்பட நால்வரைத் தாக்கிக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸார் ஆறுபேரைக் கைது செய்துள்ளனர்.

இந்த ஆறு பேரையும் சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் ஆஜர் செய்தனர். அவர்களை எதிர் வரும் பத்தாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (3-117)

## இளவாலை, மணலடைப்பு
## ஸ்ரீ அண்ண மகேஸ்வரர் தேவஸ்தானம்
## விசேட பொதுக்கூட்டம்

*இடம்:* ஆலய மண்டபம்

*காலம்:* நாளை (02.10.2005) ஞாயிறு முற்பகல் 10 மணி.

பங்கு அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- *பரிபாலன சபை.*

(40595)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 10 - 09 - 1950



உதிர்வு 01 - 09 - 2005

# செல்வி செல்வராணி சுப்பிரமணியம்

(முன்னாள் முரசொலி, நம்நாடு பத்திரிகை நிறுவனத்தின் பணியாளர்)

*விழிகளில் கசிந்த நீர் கனத்து வரண்டு வற்று முன்*
*விதிவழி நீர் விரைந்து இறைபதம் ஏகியோர்*
*திங்கள் கழிந்ததே!*

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்**

*இன்று (01.10.2005) சனிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**சகோதரர்கள், சகோதரி, மைத்துனன், மைத்துனிமார், மருமக்கள்.**

VH லேன், இருபாலை, கோப்பாய். (40482) (42.21.16.15)

## மதிப்பீட்டு முடிவுகள் திங்கள் அனுப்பப்படும்

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றி, பாடங்களுக்கு மீள் பரீசீலனைக்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கான மீள்பரிசீலனை மதிப்பீட்டு முடிவுகள் எதிர் வரும் திங்கட்கிழமை சம்பந்தப்பட்டவர்களுக்கு பரீட்சைத் திணைக் களத்தால் அனுப்பிவைக்கப்படவுள்ளன எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிர்சிங்க அறிவித்துள்ளார்.

பாடசாலை அதிபர்களூடாக விண்ணப் பித்தவர்களுக்கு அவ்வப் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்தவர்களுக்கு அவர்களுடைய சொந்த முகவரிக்கும் முடிவுகள் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன. (3-152)

## 14 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

*நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி நிகழ்வுகள்.*

**இடம் :-** விளையாட்டுக்கழக மைதானம்

**காலம் :-** நாளை (02-10-2005) ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :-** பி.ப 3 மணி (புதிய நேரம்)

காட்சிப்போட்டி, நவசக்தி வி.க. எதிர் எல்லாளன் வி.க., இறுதிப்போட்டி, கரணவாய் மத்தி வி.க. எதிர் யங்கென்றிஸ் வி.க. இளவாலை.

*அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.*

**எல்லாளன் விளையாட்டுக்கழகம் நவக்கிரி, புத்தூர்.**

(40602) (26-11.16)

## உளம் கனிந்த வாழ்த்துக்கள்



இறைபணியில் தன்னை அர்ப்பணித்து 01-10-2005 இல் 25 வருடங்கள் நிறைவு காணும் எமது பாடசாலை அதிபர்

அருட்சகோதரி

**அழகேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை**

அவர்களை இறையாசி பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்ந்து அவர் பணி சிறக்க மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அ.ச.

**யா/மானி.செற் ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை**

(40582) (21.16.11)

## தாதிப் பயிற்சி முடித்தோருக்கு U.K.இல் வேலைவாய்ப்பு

**U.K.இல் உள்ள பிரபல்யமான Nursing Home இற்கு அரச சான்றிதழ் பெற்ற தாதிப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை உத்தரவாதச் சான்றிதழுடன் வேலைவாய்ப்பு.**

மேலதிக தொடர்பிற்கு: T.P.:0776180082

**E-Mail- K_Thushanthan@hotmail.Com**

**V. அண்ணாமலை**

"ஐங்கரன் இல்லம்"

சூராவத்தை, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

**திருமதி சுந்தரமூர்த்தி நற்குணவதி (யோய்)**

**(உரிமையாளர், யோய் பார்மசி)**



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது இணுவில் வீதி, மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி சுந்தரமூர்த்தி யோய் நற்குணவதி 26.09 .2005 திங்கட்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் சந்திரசேகரம்பிள்ளை சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்தையா நடராஜா - பொன்மலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சந்திரசேகரம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுகந்தினி (சுவிஸ்), சுதந்தன் (உரிமையாளர், யோய் பார்மசி, மானிப்பாய்), சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரகாசம் (சுவிஸ்), மதிவதனா, பாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆனந்தன் (சுவிஸ்), மிதுஷன் (சுவிஸ்), யதுஷன் (சுவிஸ்), மதிசுதன் விஷ்னுஜன் (சுவிஸ்), சௌமியன் (சுவிஸ்), ராதை (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், நவீன ராஜா (சங்கரத்தை), நீற்றா (கனடா), நந்தினி (யாழ்ப்பாணம்), நேசபரன், காலஞ்சென்ற நேசராசா, நவீனி (கனடா), முத்தழகன் (உரிமையாளர், யோய் பார்மசி, பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், செல்வராணி, விக்னராஜா, நாகேஸ்வரன், காலஞ்சென்ற மாலினி, தேவசுந்தர், திருலோஜினி, சத்தியமூர்த்தி (இளைப்பாறிய படவரைஞர்), சந்திரவதனா (கொழும்பு), ஆகியோரின் அன்பு மைத்துனியும், முத்தையா செல்வராஜா (இளைப்பாறிய ஆசிரியர், தும்பளை), திலகவதி செல்வராஜா (இளைப்பாறிய ஆசிரியை, தும்பளை) ஆகியோரின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி (மானிப்பாய்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**ச.சுந்தரமூர்த்தி** (கணவர்)

**சு.சுதந்தன்** (மகன்), (யோய் பார்மசி, மானிப்பாய்).

தொ.பேஇலக்கம்: 222 2754, 4591960

(40591)(21.15.16)

# புனித நகர் வீட்டுத் திட்டத்தில் ஆயிரமாவது வீடு கையளிப்பு

கரவெட்டி,ஒக்.1

வடமராட்சி கற்கோவளம் புனித நகர் பகுதியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தால் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கென மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டத்தில் ஆயிரமாவது வீடு கடந்த புதன்கிழமை பயனாளியிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி திருமதி மஸ்ரி நொட்ஸ், ஜப்பான் தூதரகப் பிரதித் தலைமை அதிகாரி திருமதி கரூபி, அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் யாழ். மாவட்ட அலுவலகத் தலைமை அதிகாரி அக்ரன் ரகாய் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவிற்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமை வகித்தார்.

முற்பகல் 11.30 மணியளவில் பிரதம விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தனர்.

தலைமை உரையை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதி வதிவிடப் பிரநிதி திருமதி மஸ்ரி நொட்ஸ், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். அலுவலகத் தலைமை அதிகாரி அக்ரன் ரகாய், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, புனிதநகர் செயலர் வே.மோகனராசா ஆகியோர் உரையாற்றினர்.

ஆயிரமாவது வீடு புனித நகரில் உள்ள வே.மோகனராசா என்பவரின் குடும்பத்துக்கு சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கப்பட்டது. (ஒ-70-78)

# பிரதேச செயலகம் புதிய கட்டடத்தில்

தென்மராட்சி,ஒக்.1

சாவகச்சேரியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலகம் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது.

அன்றைய தினம் பிரதேச [illegible]களின் ஆக்கங்களைக் கொண்ட மலர் வெளியீடும் இடம்பெறும்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் க. கணேஸும்-

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனரமைப்புத் திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன், யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் க. கேதீஸ்வரன், மாகாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியளாளர் குகனேசன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

பிரதேச மலரினை யாழ். அரச அதிபர் வெளியிட திட்டப் பணிப்பாளர் க. கேதீஸ்வரன் பெற்றுக்கொள்வார். (ஒ-117)

# வரணி வடக்கில் கிணறு வெட்ட நிதி

வரணி,ஒக்.1

வரணி வடக்கு சிமிழம்மன் கோயிலடியில் வசிக்கும் மக்களின் குடிதண்ணீர் வசதி கருதி சாவகச்சேரி பிரதேச சபை கிணறு ஒன்றைக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது. பிரதேசசபை நிதியில் இருந்து இதற்கென ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-170)



வடமராட்சி, கற்கோவளம் புனிதநகர் வீட்டுத்திட்டத்தின் ஆயிர மாவது வீடு கையளிப்பு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பிரதி வதிவிடப் பிரதிநிதி திருமதி மஸ்ரி நொட்ஸ், ஜப்பானியத் தூதரக பிரதித் தலைமை அதிகாரி திருமதி கரூபி, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ். அலுவலக அதிகாரி அக்ரன் ரகாய் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், திருமதி மஸ்ரி நொட்ஸ் ஆயிரமாவது வீட்டின் திறவுகோலை குடியிருப்பாளரிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்

(படங்கள்- கரவெட்டி, குடத்தனைச் செய்தியாளர்கள்)

# கிராய்குள முதற்கட்டப் பணி பூர்த்தி

வலி. தெற்கு,ஒக்.1

நியாப் திட்டம் II இன் கீழ் வழுக்கியாறு புனரமைப்பின் முதற்கட்டப் பணியாக மேற்கொள்ளப்பட்ட மானிப்பாய் கிராய் குளத்தின் புனரமைப்பு பூர்த்தியடைந்துள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடமிருந்து கிராய்குளம் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பேற்று குறிப்பிட்ட காலப்பகுதியில் முடித்துள்ளது.

கிராய்க்குளம் புனரமைப்புத் தொடர்பாக அரை அடி ஆழப்படுத்த வேண்டும் என்ற ஒப்பந்த நிபந்தனைக்கு மேலதிகமாக ஒன்றரையடி வரை ஆழப்படுத்தி குளத்தில் தேங்கக் கூடிய நீரின் அளவு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி குளம் ஆழமாக்கப்பட்டு புனரமைப்பு வேலை முப்பது நாள்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

படிக்கட்டு வேலைகள் முடிவடைந்தவுடன் யாழ். அரச அதிபர் தலைமையில் பொங்கல் விழா நடத்த உத்தேசித்துள்ளதாக சம்மேளனத் தலைவர் க. முதலியார் தெரிவித்துள்ளார். (ஒ-152)

# சமுர்த்தி முத்திரை முறைப்பாடு கிராம அலுவலர் பெறுவார்

தென்மராட்சி,ஒக்.1

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி முத்திரை கிடைக்காதவர்களின் முறைப்பாட்டை பிரதேச செயலகத்தில் ஏற்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் மேன் முறையீட்டுக் கடிதங்களைத் தத்தமது பகுதிக் கிராம அலுவலரிடம் கையளிக்குமாறு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீடுகள் பிரதேச செயலகத்தில் கையளிப்பது செப்ரெம்பர் 23ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளதாகவும் -

கிராம அலுவலர்கள் ஊடாகக் கிடைக்கும் மேன்றையீட்டுக் கடிதங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படுமெனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# கொடிக்காடு மயானம் புனரமைப்பு

வரணி,ஒக்.1

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இடைக் குறிச்சி கொடிக்காடு இந்து மயானம் திருத்தப் படவுள்ளது. உணவுக்கு வேலை என்ற திட்டத்தின் கீழ் ஆயிரத்து 694 மனித வலுவுடன் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் இடைக் குறிச்சி கிராம முன்னேற்றச் சங்கம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளது. இத்திட்டத்துக்கான அனுமதியை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகம் வழங்கியுள்ளது. (ஒ-170)

# 'நீர்ப்' திட்டத்தின் கீழ் 134 வீடுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.1

நீர்ப் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தினால் 134 வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இவற்றில் அரியாலை மத்தி தெற்கு ஜே/96 கிராமசேவகர் பிரிவில் 17 வீடுகளும், அரியாலை மத்தி வடக்கு ஜே /94 பிரிவில் 13 வீடுகளும், திருநெல்வேலி மத்தி வடக்கு ஜே /114 பிரிவில் 46 வீடுகளும், கோண்டாவில் வடகிழக்கு ஜே /119 பிரிவில் 20 வீடுகளும், கோண்டாவில் மத்தி மேற்கு ஜே /128 பிரிவில் 19 வீடுகளும், ஐயனார் கோயிலடி ஜே /97 பிரிவில் 19 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் 134 வீடுகளுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவும் - 98 வீடுகளுக்கு 2 ஆம் கட்டக்கொடுப்பனவும் - 49 வீடுகளுக்கு 3 ஆம் கட்டக் கொடுப்பனவும்- வழங்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார். (ஒ-12)

# சர்வோதய ஸ்தாபகர் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

வட இலங்கை சர்வோதயத்தின் ஸ்தாபகர் அமரர் கந்தையா திருநாவுக்கரசின் 4ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு புங்குடு தீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறபடவுள்ளது.

வட இலங்கை சர்வோதய நிலையப் பொறுப்பாளர் க.புஸ்பமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை புங்குடுதீவு சிவன் ஆலயகுரு சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் நிகழ்த்துவார். நினைவுரைகளை பேராசியர் அ. சண்முகதாஸ், தீவக வலய ஆசிரிய ஆலோசகர் த. தர்மராசா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.சுந்தரலிங்கம், வடஇலங்கை சர்வோதய உறுப்பினர் சி.மு.நாகரத்தினம், இயக்குநர் சபை உறுப்பினர் திருமதி இ.தங்கேஸ்வரி ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் வட இலங்கை சர்வோதய நுண்கலைக் கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-202)

# கிராமிய வங்கிகள் ஊடாக சுனாமிக்குப் பிந்திய இலகுகடன்

## ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்,ஒக்.1

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் சுழற்சி முறைக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்திலுள்ள 23 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினுடாக இக்கடன் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2கோடியே 20 லட்சம் ரூபா ஊனமுற்றோர் சுயதொழில் வாய்ப்பு, மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற வருமானமீட்டும் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலைக்குப் பிந்திய சுழற்சி முறை இலகுக் கடனாக 72லட்சத்து 50 ஆயிரம் ரூபா 11 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளூடாக வழங்கப்படுகின்றது.

ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை கடன் வழங்கப்படுகின்றது.

இக்கடன்களைப் பயனா கள் தமது பிரதேச கிராமிய வங்கிகளுடாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-202)

# புதுக்குடியிருப்பு வயல் பகுதியில் குடியிருப்போருக்கு காணி ஆவணம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

யாழ்ப்பாணம், நாவாந்துறை, ஜே/88 புதிய சோனகத் தெரு கிராம அலுவலர் பிரிவில், அராலி வீதிக்கு வடக்குப்புறமாக உள்ள புதுக்குடியிருப்பு வயல் பகுதியில் நீண்டகாலமாகக் காணிக்கான ஆவணங்கள் எதுவுமின்றி வசிப்பவர்களுக்கு காணி ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவர்களுக்கு ஆவணங்களை வழங்குவதில் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாழ். பிரதேச செயலருக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் முறையிடலாம் என யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-12)

# குடத்தனையில் பாரதி விழா

குடத்தனை,ஒக்.1

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபைக் கல்வி வளாகத்தின் முத்தமிழ் மன்றம் நடத்திய பாரதி விழா கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெற்றது.

மன்றத் தலைவி செல்வி லோ.கனிமொழி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் செயல்திட்ட இணைப்பாளருமான சந்திரன் பிரான்சிஸ் பங்கேற்றார். (ஒ-78)

# காலபோக நெற்செய்கை குறித்து மானிப்பாயில் ஆலோசனைக் கூட்டம்

வலி. தெற்கு,ஒக்.1

காலபோக நெற்செய்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளன காரியாலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

மானிப்பாய் மேற்கு - கட்டுடை விவசாய சம்மேளனத் தலைவர் சி.பொ. வ.மா.க. முதலியார் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

காலபோக நெற்செய்கை விதைப்புக் காலம், அறுவடைகாலம், கால் நடைகள் கட்டி வளர்த்தல், விதைப்பின் பின்னரும், அறுவடையின் போதும் வயல்களுடாக உழவு இயந்திரப் பாவனை, கட்டாக்காலி கால்நடை பிடிகாரர்கள் நியமனம் போன்ற பலவேறு முடிவுகள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளன. (ஒ-152)

# தென்மராட்சி முதியோர் தினவிழா

தென்மராட்சி,ஒக்.1

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவினரின் சர்வதேச முதியோர் வார விழா எதிர்வரும் நான்காம் திகதி பிற்பகல் 2மணிக்கு கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச முதியோர் வாரம், சிறுவர் தினம் ஆகியவற்றையொட்டி தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு இந்த நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-117)

# உலக சிறுவர் தினம் - ஒரு மீள்பா

உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் எங்கே வாழ்ந்தாலும். அவர்கள் மேற்குலக நாடுகளில் வாழ்ந்தாலும், அல்லது கீழைத்தேய நாடுகளில் வாழ்ந்தாலும். அவர்கள் அழகான அலங்கார உடை அணிந்தவர்களாக இருந்தாலும் அல்லது அரைநிர்வாணமாக மூக்கொழுகக் காணப்பட்டாலும் அவர்கள் எல்லோரினதும் அடிப்படைத் தேவைகள், உணர்வுகள், அவர்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் யாவும் ஒரே மாதிரியாகவே இருக்கும். சாதாரணமாக ஏழ்மை நிறைந்த வசதியற்ற குடும்பங்களிலுள்ள சிறுவர்களே சிறுவர் உரிமை மீறல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகிறார்கள் என்ற மேலோட்டமான தொரு கருத்து நிலவினாலும் உண்மையில் சமூகத்தில் காணப்படுகின்ற அதிக மான சிறுவர்கள் இன, மத, கல்வித்தர, வாழ்க்கைத்தர வேறுபாடின்றி பல்வேறு இம்சைகளுக்கும் துஷ்பிரயோகத்திற்கும் ஆளாகின்றார்கள்.

## உலக சிறுவர்தினம் இன்றாகும்.

அது மாத்திரமின்றி இத்தகைய இம்சைகளையும், துஷ்பிரயோகங்களையும் மேற்கொள்பவர்கள் பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் மிகவும் தெரிந்தவர்களாகவோ, உறவினர்களாகவோ, சிலவேளைகளில் பிள்ளைகளின் பெற்றோர்களாகவோ, ஆசிரியர்களாகவோ இருக்கின்றார்கள் என்பது கசப்பானதொரு உண்மை.

எனவே இது பற்றிய உண்மையான நிலையை விளக்கி சிறுவர்கள் மத்தியிலும் அவர்களுடன் சார்ந்தோர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஒரு கட்டாய கடமையாக அமைகிறது.

சிறுவர் உரிமை எனும்போது அது பல அம்சங்களையும் உள்ளடக்கியதாகும். சிறுவருடைய உடல், உளவளர்ச்சி பெற்றோர், பாதுகாவலர் சிறுவர்களை வழி நடத்த கையாளவேண்டிய வழிமுறைகள், அவர்களின் உடல், உள ரீதியான பாதிப்புக்கள், பாதிப்படையும் சிறுவர்களுக்கு உதவும் வழிமுறைகள், அவர்களுக்கு இலங்கையில் உள்ள சட்டப் பாதுகாப்புக்கள் போன்ற பல அம்சங்களையும் சிறுவர் உரிமை என்பதற்குள் வகுத்து உள்ளடக்குவர்.

சிறுவர்கள் தமது வளர்ச்சிக்கும் விருத்திக்கும் அடிப்படையாக அவர்கள் கொண்டுள்ள தேவைகளே அவர்களது உரிமைகளாக அமைகின்றன. இத்தேவைகள் அவர்களது உடலியல் தேவைகளாக மட்டும் அமையாது உளரீ தியான தேவைகளாகவும், பாதுகாப்புடன் தொடர்புடைய தேவைகளாகவும் அமைகின்றன. இத்தேவைகளைச் சிறுவர்கள் நிறைவு செய்வதில் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு இம்சைகளை யும் தடைகளையும் சிறுவர் துஷ்பிரயோகமென நாம் கருதுகிறோம்.

இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் யாதெனில் மேற்கூறப்பட்டவற்றில் பலவற்றை நாம் சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதுவதில்லை. அது மாத்திரமின்றி அவை நியாயமான வையெனக் கருதும் பெற்றோரும், ஆசிரியர்களும், ஏனையோரும் எம்மத்தியில் அதிகமாகவே உள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் போது அவர்கள் பல்வேறு உளப்பாதிப்புக்களுக்கும் அதன் தொடர்ச்சியான நடத்தைக் கோல மாற்றங்களுக்கும் உள்ளாகின்றார்கள் என் பதை ஒவ்வொரு பெற்றோர், ஆசிரியர்களும் ஏனையவர்களும் உணரவேண்டும் வளர்ந்தவர் ஒருவர் மற்றவர்களுக்கு முன்னிலையில் ஏசப்படும்போது அவருக்கு ஏற்படும் அவமான உணர்வு சிறுவருக்கும் ஏற்படும். இதுபோல் ஒரு வளர்ந்தவர் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது அவருக்கு ஏற்படுகின்ற அதே உணர்வுத் தாக்கங்கள் சிறுவர்களுக்கும் ஏற்படும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய தேவைகள் குறித்தும் துஷ்பிரயோகங்கள் இம்சைகள் குறித்தும் நாம் விழிப்பாய் இருப்போம்.

## சிறுவர் உரிமைகள் என்றால் என்ன?

சிறுவர்களாகிய நாங்கள் எமது நாளாந்த வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பல விடயங்கள் தேவை எனக் கருதுகின்றோம். எமது ஆரோக்கியத்திற்குப் போசாக்கு நிறைந்த உணவு தேவை. சுத்தமான உடையும் சுகாதாரப் பராமரிப்பும் தேவை. உடல்ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் பாலியல் தொடர்பாகவும் நாம் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என நாங்கள் கருதுகின்றோம். எம்மிடையே உள்ள திறமைகளும் ஆற்றல்களும் வளர்க்கப்பட வேண்டும் எமது படிப்பு தொடர்பாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாகவும் எங்களுடைய விருப்பு வெறுப்புக்களையும் சில கருத்துக்களையும்கூற பிள்ளைகளாகிய எங்களுக்கு விருப்பம் உண்டு.

இப்படியாக நாங்கள் உயிர்வாழவும், பாதுகாக்கப்படவும் திறமைகளில் வளரவும் கருத்துக்களைக் கூறவும் எமக்குத் தேவை உண்டு. இந்த அடிப்படைத் தேவைகளையே நாம் சிறுவர் உரிமைகள் என்று சிறுவர்களாகிய நாங்கள் விளங்கிக் கொள்கின்றோம்.

சிறுவர் உரிமை என்பதனை கண்கொண்டு பார்க்கும் போது சிறுவர்களாகிய நாம் எதனைப் பெறவேண்டுமென நினைக்கின்றோம்? எமது எதிர்காலம் நன்றாக் அமைய வேண்டும் நாம் எமது நாட்டுக்கும் வீட்டுக்கும் பிரியோசன மானவர்களாக மாறவே விரும்புகின்றோம். சிறுவர்களாகிய எமது உரிமைகள் பற்றி பெற்றோர்கள் மத்தியிலும் பெரியவர்கள் மத்தியிலும் ஏன் எம் போன்ற சிறுவர்கள் மத்தியிலும் கூட போதிய விழிப்புணர்வு இல்லை. சிறுவர் உரிமைகள் பற்றி எல்லோருக்கும் நல்ல தெளிவு இருந்தால்- சிறுவர்களின் உரிமைகள் சரியாக வழங்கப்பட்டால்- சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்படையும் எமது சமுதாயமும் முன்னேற்றமடையும்.

(நன்றி - 'சிறுவர் குரல்')

### வீதியில் தொந்தரவுகள்

தற்பொழுது சிறுவர்களுக்கு வீதியில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றில் ஆண்களே பல பிரச்சினைகளுக்கு காரணம். இதனால் சுதந்திரமாக கல்வி கற்கச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. முக்கியமாக வேலை இல்லாமலும், படிக்காமலும் வீதியில் நிற்கும் ஆண்களையே குறிப்பிடுகின்றேன். பெண்களுக்கு பின் செல்லல், அவர்களோடு கதைக்க முற்படல் போன்ற செயல்களில் வீதியில் வேளையில்லாமல் திரியும் ஆண்கள் ஈடுபடுகின்றனர் இதன் மூலம் சமூகத்தில் அச்சிறுமிக்கு எவ்வளவு பிரச்சினை. சமூகத்தில் அவர்களுக்கு மரியாதை கிடைப்பது குறைவாக உள்ளது. இவர்கள் மூலம் நல்ல பழக்கமுடைய சிறுமியும் பாதிக்கப்படுகிறாள். இவர்களுக்குப் பயந்து கல்வி நிலையம் செல்லாது அவள் கல்வி குழம்புகின்றது. இதனால் இப்பிரச்சினையை குறைக்க முயலவேண்டும் என்பதே எனது கருத்து.

*மாணவி - வயது 16*
*கோண்டாவில்.*

---

பாடசாலைக்குச் செல்லும் மாணவி ஒருவரின் பின்னால் திரியும் இளைஞன் அவளைத் தனது காதலி எனக் கூறி திரிவான் இவனது செயலால் அம்மாணவி வீட்டிலே தங்கியிருந்து படிக்கும் நிலை ஏற்படும்.

பெண்கள் சுதந்திரமாக தனிமையில் திரியும் நிலை இல்லாமை. சிறுவர்களின் தனியுரிமை மீறப்படுதல் எனப்படும். இதனால் இவர்களின் கனவுகள் நிறைவேற்றப் படாமல் போகும்.

பெண்கள் வகுப்பு முடிவடைந்து வீடு செல்லும் போது தெருவில் நிற்கும் ஆண்களினால் ஏற்படும் பிரச்சினைகளை எமது உறவினர் பெற்றோரிடம் கூற அவர்கள் எம்மை சந்தேகம் கொண்டு எங்களிடமே முழுப் பிழையும் உள்ளதென நினைத்து அவர்கள் எம் மீது சந்தேகம் கொள்கின்றனர். அதனை நாம் அவ்வாறு கூறுவது பிழையென கூறும் போது அதனை ஆமோதிக்காது உறவினர் கூற்றை ஆமோதிக்கின்றார்கள்.

*மாணவி - வயது 16*
*இணுவில்.*

---

### பஸ்ஸிலும் தொந்தரவுகள்

பஸ் வண்டிகளில் ஆண், பெண் இருபாலாரும் சேர்ந்து ஏறுவதனை தடுத்தல் வேண்டும். ஏனென்றால் அதில் பெண்களுக்கு விரும்பாத செயல்களை ஆண்கள் செய்வதனால் அவர்களிடையே வாக்குவாதம், தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படும்.

*மாணவி - வயது 17*
*உடுப்பிட்டி*

---

### மதுவால் வேதனை

பொதுவாக அனைத்து சூழல் பகுதிகளிலும் சிறுவர்கள் காணப்படுகின்றனர். இத்தகைய சூழலில் மது பாவனையில் ஈடுபடுவோர் ஆபாசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வதால் தேவையற்ற மனவேதனை மற்றும் பல்வேறு பிரச்சினைகள் உண்டாகும்.

*மாணவன் - வயது 16. இணுவில*



இன்றைய சிறுவர் தின
கொண்டுள்ள பிரச்சின
அவர்களுடைய உணர்வுகள்
சிறுவர்களிடையே எமது வி
கருத்துக்களைச் சேகரித்
பிரச்சினைகள் பற்றியும் ச
என்ன சொல்

### பெற்றோருக்கு நன்றி

பெற்றோர்கள் எமது கல்விக்கு கல்விசார் நடவடிக்கையில் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். எம்மை கஷ்ரப்பட்டு கல்வி கற்க. வைக்கின்றார்கள். எம்மைப் படிப்பதற்காக பல வழிகளை சொல்லித்தருகிறார்கள். நாம் எமது எதிர்காலத்துக்காக நல்ல வாழ்க்கை வாழ்வதற்காக பெரிதும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

*மாணவி - வயது 14. நாரந்தனை..*

---

கல்வியின் முக்கியத்துவம் பற்றி பெற்றோர் எனக்கு அளிக்கும் அறிவுரை மேன்மைக்குரியது. கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிப்போராக பெற்றோர் காணப்படுகின்றனர்.

*மாணவி - வயது 16. இணுவில்.*

---

### மட்டம் தட்டுவது பிடிப்பதில்லை

படிப்பைப் பற்றிக் கதைத்தால் எனக்கு கோபம் வருகிறது. மட்டம் தட்டுகிறது பிடிக்கவில்லை. சாப்பிடும் போது வீட்டில் என்னைப் பற்றி கதைப்பார்கள். ஆதலால் என்னால் சாப்பிட முடியவில்லை.

*மாணவன் - வயது 15. யாழ்ப்பாணம்.*

---

பெரியவர்கள் எம்மை சிறுவர்கள் எனப்பாராது கெட்ட வார்த்தைகளால் பேசுகிறார்கள். இது மட்டுமன்றி பெண்களுக்குப் பின்னால் செல்லுதல், விசில் அடித்தல் போன்ற பல்வேறு சேட்டைகளிலும் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு பொதுவாக எல்லாப் பெண் சிறார்களும் உட்படுத்தப்படுகின்றனர்.

மாணவன் - வயது 16. இணுவில்.

---

### தண்டனை வேண்டாம்

நான் படிக்க விரும்புகின்றேன். அதற்காகத் தண்டனை தரவேண்டாம். அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

*மாணவி - வயது11. நாரந்தனை.*

சிறுவர் பாதுகாப்பு - இலங்கை
146, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.:021-222 5078

# ...ார்வையும் உணர்வுப்பகிர்வுகளும்



தினத்தையொட்டி சிறுவர்கள்
ச்சினைகள் தொடர்பாகவும்
வுகள், தாக்கங்கள் தொடர்பாகவும்
விழி உளசமூக பணியாளர்கள்
கரித்தனர். தாம் எதிர்நோக்கும்
ம் சமூகம் பற்றியும் சிறுவர்கள்
சால்கிறார்கள்.....?

## வீட்டில் வேலைகள் அதிகம்

ஒவ்வொரு வேலைகளைச் சொல்லி எங்களைப் படிக்கவிடமாட்டார்கள். வீட்டில் இரவு படிக்க வென்று தொடங்கினால் கதைத்துக் கொண்டு இருப்பார்கள். அயல்வீட்டில் வானொலியைப் போட்டிருப்பார்கள். அதனால் எமக்கு படிக்க முடியவில்லை. கற்கும் ஆசையுண்டு. இப்படிப் பட்ட இன்னல்களால் படிக்கமுடியவில்லை. தகப் பனார் நடக்கமுடியாதவர். அவருக்கு செய்ய வேண்டிய வேலைகளை செய்துவிட்டுத் தான் நாம் எங்கு சென்றாலும் போக வேண்டும். குறிப்பாக பாடசாலை சென்றாலும் அவரிற்கு செய்யவேண்டிய வேலைகளைச் செய்துவிட்டுத் தான் செல்லவேண்டும். அது எமக்குரிய கடமை தான். அதனால் பாடசாலை செல்ல தாமதமா கின்றது. இப்படிப்பட்ட சில தடைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது.

*மாணவி - வயது 15. தாவடி*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

வீட்டில் வறுமையின் காரணமாக சிறுவர்கள் வேலைக்கு செல்லுவதால் அவர்களின் வாழ்க்கை கேள்விக் குறியாகி விடுகின்றது. சில வேளைகளில் பாடசாலைக்கு தொடர்ச்சியாக வராமல் பின் வந்து நிற்பவர்களினை ஆசிரியர்கள் அந்த மாணவனை அல்லது மாணவியினை ஏன் வருகின்றாய்? வீட்டில் நின்று வேலையினைப் பாரென்று சொல்லு வார். அதனால் அவர்கள் பாடசாலைக்கு வரமாட் டார்கள். ஏனென்றால் அவர்களை அவர்கள் வகுப்பு மாணவர்களுக்கு முன்னால் ஆசிரியர் அவமானப்படுத்தி விட்டார் என்ற படியால். (இது என் நண்பனின் கதை).

*மாணவன் - வயது 17. கொக்குவில்*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

படிக்கும் பிள்ளைகளை வேலைக்குப் போகச் சொல்லுதல் தவறானது இதனால் பிள்ளைகளி டையே பொறாமை, பேராசை, வஞ்சகம் ஆகியன ஏற்படுகின்றன. இவ்விடயம் சிறுவர்களிடம் காணப் படக்கூடிய பண்புகளாகுமா? என சிந்தியுங்கள்.

மாணவி - வயது 16

## வேலைக்குச் செல்லல் தவறு

சிறுவர் வேலைக்குபோவது தவறா னது. சிறுவர்கள் வேலைக்குச் செல்வதால் சிறுவர்களது உரிமைகள் பறிக்கப்படு கின்றது. உடல், உளரீதியாக பாதிக்கப் பட்டு பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் உட்படுகின்றனர். எதிர்காலமே கேள்விக் குறியாகிறது. இதை விட பல பாதிப்புக் கள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் ஏற்படுகின்றன.

*மாணவன் - வயது 16.*
*கோண்டாவில்.*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~

சிறுவர்களை வேலைக்கு அமர்த்து வது என்பது தவறான கருத்தாகும். சிறுவர்கள் படித்து தன் பெற்றோருக்கு பெருமை தேடித் தரவேண்டும். தானா கப் படிக்கின்ற வயதில் வேலை செய்யத் தேவையில்லை. அதற்கான அவசியமு மில்லை. சிறுவர்கள் படித்து இந் நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடுக்கச் சிறு வர் பாதுகாப்புக் குழு என்னும் அமைப்பு உள்ளது. எத்தனையோ பணக்கார வீடுகளில் சிறுவர்களை வற்புறுத்தி வேலைக்கு அமர்த்துவார்கள். ஆனால் அவர்களது மனம் செய்யும் வேலையில் இருக்காது. படிப்பில்தான் இருக்கும். அவ்வீடுகளில் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலை சென்று படிக்க அனுப்புவார்கள். ஆனால் இப்பிள்ளையை வற்புறுத்தி நன்றாக வேலை வேண்டுவார்கள். அப்பிள்ளை படிக்கச் செல்வதைப் பார்க்க இந்தப் பிள் ளைக்கு (வேலைக்கு அமர்த்தும் பிள்ளை) ஆசையாக இருக்கும். தானும் சென்று படித்து வைத்தியராகவோ, ஆசிரியராகவோ வரவேண்டும் எனப் பல எண்ணங்களை எண்ணுவார்கள். ஆனால் இவர்களால் தம் எண்ணங்களை நிறைவேற்ற முடியாது. முதலில் பெற்றோர் தம் பிள்ளைகள படிக்கவேண்டு மென நினைக்க வேண்டுமே தவிர வேலைக்கு அமர்த்தி காசு சம்பாதிக்க வேண்டுமென்று நினைக்கக்கூடாது. இவர்கள் வளர்ந்தவுடன் சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்களாக மாறுவதை ஏற்கமுடியாது. முதலில் பெற்றோர் தன் பிள்ளைகள் படிக்கவேண்டுமென நினைக்க வேண்டுமே தவிர வேலைக்கு அமர்த்திக் காசு வேண்டவேணுமென்று நினைக்கக் கூடாது. இவர்கள் பின்னர் வளர்ந்தவுடன் சமூகத்திற்கு ஒரு தீங்கு விளைவிப்பவர்களாக மாறுவர். சிறுவர் களை வேலைக்கு அமர்த்துதல் என்பது மிக மிகத் தவறான கருத்தாகும்.

*மாணவி* - வயது 18.
*இணுவில்.*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~

இலங்கையில் கல்வியில் முன்னேற்றம் அடைந்து காணப்பட்ட யாழ் மாவட் டம் கல்வித் தராதரத்தில் இன்று வீழ்ச் சியடைந்து வருவதற்கு முக்கிய கார ணம் பெற்றோர் தமது வறுமை காரண மாகத் திறமைமிக்க பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதே முக்கிய கார ணமென நினைக்கிறேன். வெளிநாடு களில் சட்டமுள்ளது. 16 வயதுக்கு மேல் தந்தை உழைப்பில் வாழக்கூடாதென எனினும் 18 வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்ற கொள் கையே இலங்கையில் நிலவுகிறது. இலங் கையில் பல தொழிற்சாலைகளிலும் கடை களிலும் 10, 12 வயது சிறுவர்களே அதி கம் வேலை செய்பவர்களாகக் காணப் படுகின்றனர். இனி பரீட்சை நடக்கும் காலம். இதனால் வேலை செய்யும் சிறுவர் களது சிறந்த படிப்பு இழக்கப்படுகிறது உதாரணமாக எனக்குத் தெரிந்த என் ஊரைச்சேர்ந்த என் வயதுச் சிறுமியே யாழ்ப்பாணத்தில் அனைவருக்கும் பிரபல்யமான ஒரு நிறு வனத்தில் வேலை செய்யச் செல்வதை நான் கண்ணூடாகக் கண்டு வருகிறேன். இதற்கு அவரது பெற்றோரே காரணம். இதன்ால், அவரது பாடசாலைக் கல்வி அவருக்கு கிடைக் காமல் போகிறது. இது எந்த விதத்தில் சரியானது? அரசாங் கம் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுக் குத் தண்டனை வழங்கி னாலும் சிறிய சைக்கிள்கடை, தேனீர்க் கடை, இயந் திரங்கள் திருத்தும் கடை போன்றவற்றில் வேலை செய்யும் சிறுவர் களைக் கவனிப் பதில்லை. இதற்குக் கார ணம் அவர்க ளது பெற்றோரினதும், வேலைக்கு அமர்த்தும் ஈவிரக்கமற்ற முதலாளிகளின தும் செயலேயாகும். இதற்கு ஓர் தீர்வு கிடைக்க வேண்டுமென சிறுமியாகிய நான் விரும்புகின்றேன்.

*மாணவி - வயது 16.. தாவடி.*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~

எங்களுடைய விருப்பத்திற்கு விடுவது இல்லை. கட்டுப்பாட்டுடன் வளர்த்து வருகின்றார்கள்.

*மாணவன் - வயது 16.*
*சாவகச்சேரி*

~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## வீட்டில் பிரச்சினை

பாடசாலை லீவு விட்டதன் பிறகு சீருடை தைக்காததால் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டில் நிற்கிறோம். வீட்டில் சத்தம் போட்டுக் கதைத்தால் அடிப்பார் கள். எல்லோருடனும் பழக விடமாட்டார் கள். நாங்கள் ஆசைப்பட்டு எது கேட்டா லும் அது நிறைவேறுவது இல்லை.

*மாணவன் - வயது 10. கொட்டடி*

## நாம் என்ன செய்யப் போகிறோம்?

நாம் வாழும் சமூகம், எமது எதிர் கால சமுதாயம் நன்றாக அமைய வேண்டு மென்று நாம் எல்லாருமே ஆதங்கப்படு கின்றோம். அவ்வாறாயின் நாம் என்ன செய்ய வேண்டும்? சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இம்சைகளும், புறக் கணிப்புக்களும் ஒரு மோசமான எதிர்கா லத்தையே உருவாக்குகின்றன. நமக் குள்ளும் சிறுவர்கள் இருக்கிறார்கள் என் பதை நினைவிற் கொள்ளுங்கள்.

* இன்று வன்முறைகளில் ஈடுபடும் ஒருவர் வேறுயாருமல்லர். வீட் டிலோ, வெளியிடங்களிலோ வன் முறைக்கு உள்ளாக்கப்பட்ட சிறு வராக இருக்கலாம்.
* சமூக அக்கறையின்றி உலாவரு பவர் வேறு யாராக இருக்க முடியும். அக்கறையற்ற சூழ் நிலைகளில் வளர்ந்த சிறுபிள்ளை யாக இருக்கலாம்.
* துஷ்பிரயோகங்களிலும் பிறரை இம்சைக்கு உள்ளாக்குவதிலும் ஈடுபடுபவர் அத்தகைய துஷ்பிர யோகங்களுக்கும், இம்சை களுக்கும் உள்ளான பிள்ளையாக இருக்கலாம்.

தண்டனைகளாலும், அலட்சியத்தா லும், புறக்கணிப்பாலும், இம்சைகளா லும் தம்மையும் அறியாமல் பாதிக்கப் பட்ட சிறுவர்களில் நீங்களும் ஒருவர் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். சிறுவர்களை நாம் விரும்புவது போல திறமைசாலிகளாக, நற்பண்புள்ளவர் களாக, சாதனையாளர்களாக மாற்ற விரும்புவோமாயின் அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அவர் களை நாம் அவர்களாகவே ஏற்பதுதான். சிறுவர்களின் தேவைகள் சரிவர நிறை வேற்றப்பட்டால் அவர்களின் உரி மைகள் பேணப்படும். இதனால், அவர் களும் உயர்வுபெறுவதுடன் ஆரோக் கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப் பவும் முடியும்.

**இவற்றில் உங்களின் பங்கு என்ன..?**

## உங்களின் கவனத்திற்கு!

பிள்ளைகள் மீதான இம்சைகள் அடாவடித்தனங்கள் மற்றும் துஷ்பிரயோகங் களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்க பல அமைப்புக்கள் செயற்படுகின்றன. நீங்களோ வேறு பிள்ளைகளோ இத்தகைய பாதிப்புக்களை அனுபவித்தால் உடனடியாக பின்வரும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் | - பிரதேச செயலர் ரீதியாக |
| மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு (DCPC) | - 021 222 5657 |
| காவல்துறை பெண்கள் சிறுவர் பீடம் | - 021 222 2222 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) | - 021 222 5470 |
| சிறுவர் பாதுகாப்பு இலங்கை (SCISL) | - 021 222 5078 |
| ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) | - 021 222 2276 |
| மனித முன்னேற்ற நடுநிலையம் (HUDEC) | - 021 222 2571 |
| சுகவாழ்வு நிலையம் (WHC) | - 021 222 8130 |
| சாந்திகம் (AHC) | - 021 222 3338 |
| யாழ். சமூக செயற்பாட்டு மையம் (JSAC) | - 021 222 3699 |
| **விழி உளசமூக மேம்பாட்டு அமையம்** | **- 077 6358716** |

விழிப்புணர்வுக் கருத்தரங்குகளுக்கு
எம்முடன் தொடர்பு கொள்ளவும்

தொகுப்பு:
**விழி உளசமூக மேம்பாட்டு அமையம்**
17/4, றெயில்வே வியூ, கச்சேரியடி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Email: vizhips@yahoo.com

இந்த மாதமாவது...

## வாசிப்பு மாதம்

ஒக்ரோபர்

கிளைகள் பரப்பி
சிந்தனை வேர் ஊன்றட்டும்

வாசிப்பதாலும் யோசிப்பதாலும்
உலகை நேசிப்பீர்கள்

வாசிப்பே வாழ்வின் -
விழுதுகளாகும்

விழுது Viluthu ஆற்றல் மேம்பாட்டு மையம் | அகவிழி | நமது செய்தி Namathu Seithi



## சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!
கடந்த 03-09-2005 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவியும் அமரர் சின்னத்தம்பி சரவணமுத்து அவர்களின் அன்பு மனையாளுமாகிய

அமரர்
**விசாலாட்சி சரவணமுத்து**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (01-10-2005) சனிக்கிழமை நடைபெறும்.
எதிர்வரும் 03-10-2005 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
தொ. பே:0779073817, 0779073819, 0777111153.

'குமாரபுரி'
கைதடி வடக்கு,
கைதடி.

(40473)(50)



# Sri Lanka Red Cross Society

## Working in conjunction with the Australian Red Cross (ARC)

SRI LANKA RED CROSS SOCIETY

ARC has begun working on the construction of nearly 500 permanent houses for families affected by war and the tsunami in Vadamarachi East. We are presently expanding our operations team and are seeking to fill the below positions. **A very competitive salary will be offered to well qualified applicants.** All positions are based in Kilinochchi.

### 1. Community Liaison Officer

Seeking an individual who has very well developed discussion/negotiation skills, a strong grasp of concepts of community participation in decision-making, is able to work independently, and is willing to travel within Kilinochchi District.

**Specific responsibilities**

(i) Acting as the primary contact between the ARC project manager and beneficiary communities.
(ii) Hold regular meetings with community representatives in order to gauge their opinion and wishes.
(iii) Ensuring that the communities' viewpoints are clearly articulated in the process of house and infrastructure design.
(iv) Prepare and implement community surveys, and analyse the data collected.
(v) To contribute to project management and work with varied stakeholders that include architects, engineers, project managers, and local authorities.

**Qualifications**

(i) Degree level education, preferably in social work, anthropology or related discipline.
(ii) Minimum three years experience in similar position.
(iii) Good spoken English and a car/motorcycle license are a considerable advantage.

### 2. Field Officer

Seeking an individual with a background in logistics or a construction-related discipline. The successful applicant will work closely with project and construction managers in order to monitor activities and ensure effective project implementation. Considerable travel to sites in Kilinochchi district will be required.

**Specific responsibilities**

(i) Monitoring the progress of house and infrastructure construction in accordance with project plans.
(ii) Ensuring adherence to agreed construction standards.
(iii) Liaise with contactors and consultants to ensure standards and schedules are adhered to.
(iv) Managing all construction-related administration.
(v) Managing ARC logistics as needs require in Kilinochchi and Jaffna.

**Qualifications**

(i) Diploma level education in logistics or construction-related discipline.
(ii) Good spoken and written English.
(iii) Proficient with PC functions, specifically word-processing software.
(iv) Motorcycle or car license.

### 3. Interpreter

Seeking individual to work closely with expatriate staff members. The successful applicant will be fluent in both Tamil and English. INGO experience and demonstrable initiative are advantageous.

**Specific responsibilities**

(i) Interpreting between Tamil and English.
(ii) Minor logistics and administrative tasks, as needs arise.

**Qualifications**

(i) Diploma level English

### 4. Driver

Seeking careful, experienced drivers with knowledge of 4x4 vehicles. Knowledge of radio procedures and good spoken English is a considerable advantage.

**Specific responsibilities**

(i) Driving national and expatriates to site locations in Kilinochchi and to Jaffna, with occasional travel elsewhere in Sri Lanka.
(ii) Managing vehicle in accordance with Red Cross procedures.
(iii) Ensuring vehicle is well maintained and has regular services.

**Qualifications**

(i) Secondary school certificate.

The deadline for application is 7 October. Only short-listed candidates will be contacted. Bio-data and a covering letter outlining why you consider yourself suitable for the position should be sent under registered mail to:


**Branch Executive Officer,**
**Sri Lanka Red Cross Society,**
**Jaffna Branch, no. 73 Kandy Road, Jaffna.**

Clearly mark envelopes with 'ARC vacancies'.

For all positions, applicants with additional skills (over and above those noted above for the specific positions applied for) relevant to community development and construction project management will be a considerably advantage. Applicants are encouraged to outline all relevant skills and experience.

# முதலாம் ஆண்டு நிறைவில் ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக்கிளை





ஹற்றன் நஷனல் வங்கியின் 118 ஆவது கிளையான நெல்லியடிக்கிளை நேற்று தனது ஒரு வருட சேவையைப் பூர்த்திசெய்தது. 1888 ஆம் ஆண்டு பெருந்தோட்டத்துறை வளர்ச்சியை அடிப்படை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி காலத்திற்கேற்ற வகையில் தனது சேவையை விருத்தி செய்து நிலையானதும் திடமானதுமான வளர்ச்சி நிலையை எட்டியுள்ளது.

வைப்புகள் பலதரப்பட்ட சிறிய, நடுத்தர, பாரிய வணிகக் கடன்கள், விவசாயக் கடன்கள், அடகுச்சேவை, குத்தகைச் சேவை, பங்கு வணிகம், காப்புறுதிச் சேவை எனப் பலதரப்பட்ட நிதிசார் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வங்கியாக ஹற்றன் நஷனல் வங்கி காணப்படுகின்றது. இலங்கையின் மூலைமுடுக்கெல்லாம் கிளைபரப்பி பலதரப்பட்ட மக்களினது முன்னேற்றத்தின் பங்காளிகளாகச் செயற்பட்டு இன்று இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கியாக ஹற்றன் நஷனல் வங்கி திகழ்கின்றது.

1972ஆம் ஆண்டு யாழ். நகரில் தனது சேவையை ஆரம்பித்த இந்த வங்கி கொடிய போர் இன்னல்களுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் நின்று மக்களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றிவருகின்றது.

2004ஆம் ஆண்டு செம்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வங்கியின் இன்றைய பொதுமுகாமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இராஜேந்திரம் தியாகராஜாவினால் திறந்து வைக்கப்பட்ட நெல்லியடிக் கிளை அன்று முதல் வடமராட்சி மக்களின் முன்னேற்றத்தில் பங்காளனாகச் செயற்பட்டு வருகின்றது.

ஏறத்தாழ 260 சதுரகிலோமீற்றர் பரப்பளவுடைய வடமராட்சிப் பகுதியில் மக்கள் விவசாயம், கடற்றொழில், சிறுகைத்தொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர். மூன்று தசாப்த காலப் போர் அனர்த்தங்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதியின் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு மூலதனப் பற்றாக்குறை பாரிய தடையாகக் காணப்பட்டது.

ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை கடந்த ஒரு வருட காலப்பகுதியில் ஆற்றிய சேவைகள் அளப்பரியது. கடற்றொழிலாளர்கள், விவசாயிகள், வியாபாரிகள் என ஆயிரக்கணக்கானோர் இக்கிளை மூலம் நிதிசார் நன்மைகளை அடைந்துள்ளனர். அண்மையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின்போது தொண்டைமானாறு முதல் பருத்தித்துறைவரை மீனவர் கடன் வசதியைப் பெற்ற பல வாடிக்கையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். தமது உடைமைகள், தொழில்சார் உபகரணங்களை இழந்தநிலையில் பெற்ற கடனை மீளச்செலுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து 'சுசஹன' என்னும் ஒருவருட காலம் ஒத்திவைக்கப்பட்ட மீனவர் கடன் வசதியை உடனடியாக அளித்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமது தொழிலை மீண்டும் ஆரம்பிக்க உதவியது.

அதிகூடிய கடன்தொகையைக் குறைந்த வட்டியுடன் வழங்கும் ஹற்றன் நஷனல் அடகு வைக்கும் சேவை வாடிக்கையாளர் வைப்புகளுக்கு அதிகூடிய வட்டியை வழங்கும் நிலையான வைப்பு சேவை சேமிப்புக்கு வருடந்தோறும் பலகோடி ரூபாய் பெறுமதியான பரிசுகளை வழங்கும் ''பத்தும் விமன'' ''சிங்கிதி பத்து'' சீட்டுழுப்புகள் என வாடிக்கையாளரிடையே பிரபல்யம் பெற்ற பல சேவைகளை வழங்கும் ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக் கிளை விரைவில் தனது சேவையை பருத்துறைவரை விஸ்தரிக்கவுள்ளது.

போராலும் இயற்கை அர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்தின் பங்காளனாகச் செயற்படும் ஹற்றன் நஷனல் வங்கி நெல்லியடிக்கிளை முதலாவது வருடத்தைக் கடந்து வடமராட்சி மக்களுக்குப் பணியாற்ற முன்வந்துள்ளது.




# சீன வர்த்தகக் கண்காட்சியில் யாழ்.வர்த்தகர்களும் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஒக்.1

சீனாவில் நடைபெறவுள்ள மாபெரும் வர்த்தகக் கண்காட்சியில் யாழ்.வர்த்தகர்களும் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் செய்துள்ளது.

சீனாவின் கான்ரூன் நகரில் எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை இந்த வர்த்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் இயந்திரங்கள், இயந்திர உற்பத்தி, இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள், விவசாய இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், கைத்தொழில் இயந்திரங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியனவும் -

செரமிக் பொருள்கள், தளபாடங்கள், பாதணிகள், அன்பளிப்புப் பொருள்கள், மணிக்கூடுகள், ஆபரணங்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், மின் உப கரணங்கள் ஆகியனவும் - அடங்கிய 12ஆயிரம் காட்சி அறைகள் அமைக்கப்படும்.

இந்தக் கண்காட்சியைப் பார்வையிடச் செல்லும் யாழ்.வர்த்தகர்கள் தமக்குத் தேவையான தொழில்நுட்பங்களைப் பெற்று வருவதற்கான வசதிகளையும் யாழ்.வணிகர் கழகம் செய்துள்ளது. (3-203)

# உற்பத்திகளை விஸ்தரிக்கும் சுன்னாகம் ஜசுபி நிறுவனம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் பழப்பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் ஜசுபி உற்பத்தி நிறுவனம் மிகவிரைவில் சுத்திகரிக்கப்பட்ட நீர், சோடா வகைகள் என்பவற்றையும் அறிமுகம் செய்யவிருக்கின்றது.

வடபகுதி மக்களை மட்டமல்ல தென்பகுதி மக்களையும் கவர்ந்துள்ள ஜசுபி தயாரிப்புகளை மேலும் விஸ்தரிக்க உள்ளதாக உற்பத்தி முகாமையாளர் இரத்தினம் சந்திரபிரகாசம் தெரிவித்தார்.

மாம்பழச் சாறு, நெல்லிச்சாறு, பழவகைச் சாறு, யூஸ் வகைகள், ஊறுகாய் போன்ற பொருள்களை தினமும் தென்னிலங்கையில் இருந்துவரும் பெரும் தொகையான பயணிகள் விரும்பி வாங்கிச் செல்வதுடன் தொழிற்சாலையையும் பார்வையிட்டு வருகின்றனர்.

தினமும் பாடசாலை மாணவர்கள் வருகைதந்து தொழிற்சாலையை பார்வையிட்டு உற்பத்தி பொருள்களை வாங்கி செல்கின்றனர். அவர்களுக்கு உற்பத்திச் செலவுடன் மட்டும் பொருள்களை வழங்கி வருகிறோம்.

நவீன இயந்திங்கள் கரையில் - உருக்கு இயந்திரம் - பாவிப்பதால் கார அமிலம் தாக்கப்படுவதில்லை. நவீன பாத்திரங்கள் கொண்டு சுத்தம் பேணப்படுகிறது.

மக்களின் அமோக வரவேற்பை பெற்று வரும் ஜசுபி தயாரிப்புகளை விஸ்தரிக்க உள்ளோம். ஜோக்கட் என்பவற்றை விரைவில் தயாரிக்க உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (3-152)

# இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 8.30 மணி முதல் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**14 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.
* இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.

பிற்பகல் 2.00 மணிமுதல்-

**14 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் வசாவிளான் குட்டியபுலம் மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை மகாஜானாக் கல்லூரி எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன்கத்தோலிக்க வித்தியாலயம்.
* தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் மயிலிட்டி றோமன கத்தோலிக்க வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* தெல்லிப்பழை கட்டுவன்புலம் வித்தியாலயம் எதிர் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

பிற்பகல் 2 மணிக்கு-

**14 வயதுப் பிரிவு**

* மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் எதிர் மல்லாகம் மகாவித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

* வசாவிளான் மகாவித்தியாலயம் எதிர் மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

* மல்லாகம் மகாவித்தியாலயம் எதிர் வசாவிளான் மகாவித்தியாலயம். (3-86)

\- - -

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 13 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

**'ஏ' பிரிவு**

* நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி. (நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம்)
* யூனியன் கல்லூரி எதிர் மகாஜனக் கல்லூரி. (யூனியன் கல்லூரி மைதானம்)

**'பி' பிரிவு**

* யாழ்.இந்துக் கல்லூரி எதிர் விக்கினேஸ்வரக் கல்லூரி. (யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்)
* யாழ். மத்திய கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.(யாழ்.மத்திய கல்லூரி மைதானம்)

**'சி' பிரிவு**

* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி.
  (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்)
* சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை. (சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்)

\- - -

சக்தி ரீ.வி., சக்தி எப்.எம். ஆகியவற்றின் 7 வது பிறந்தநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்.மாவட்டத்திலுள்ள 50 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றுகின்றன. இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (3-190)

*ஊர்காவற்றுறை கோட்டத்தில்*

# புனித அந்தோனியார் கல்லூரி 3 பிரிவுகளிலும் சம்பியனானது

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் சம்பியனானது.

இப்போட்டிகள் அனைத்தும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

புனித அந்தோனியார் கல்லூரி முதல் பாதியில் இரண்டு கோல்களையும் இரண்டாம் பாதியில் ஒரு கோலையும் பெற்றுக்கொண்டது.

ஆட்ட முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் புனித அந்தோனியார் கல்லூரி வெற்றி பெற்றது.

16 வயதுப்பிரிவுக்கான இறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் காரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இப் போட்டியில் இரு அணிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காது விளையாடினார்கள். ஆட்ட முடிவில் புனித அந்தோனியார் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

3 ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலயமும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

சுந்தரமூர்த்தி வித்தியாலயம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

18 வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் காரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயமும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலமான முறையில் மோதிக்கொண்ட போதிலும் புனித அந்தோனியார் கல்லூரி ஒரு கோலைப் பெற்று முன்னிலையில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய சில நிமிட நேரத்தில் மேலும் ஒரு கோலைப் பெற்ற புனித அந்தோனியார் கல்லூரி மேலும் தொடர்ந்து இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஏழு கோல்களைப் பெற்றுக்கொண்டது.

8:0 என்ற கோல் கணக்கில் புனித அந்தோனியார் கல்லூரி வெற்றிபெற்றது.

3ஆம் இடத்தை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி பெற்றுக்கொண்டது. இப்போடிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் தீவக வலய மட்டத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-86)

**Dip in Cellular**

Batteries, Phone & SIM Security setup, Analog & Digital, AF & RF, Professional Service Softwares, Service Cables, Service Diagrams, Tools, Computer Hardware, Phone Repairing & Service.
3 month, Fee - 900/= (500+400)

**FREE** ரேடியோ மார்க்கோனியின் நினைவு தினத்தை முன்னிட்டு பூரண 40 வீத கழிவு வழங்கப்படுகிறது (Sep 25 - Oct 20).

1.Dip in Electronics(Repairs) - 1500/= (750 + 750)
2.சிறுவர்களுக்கான Electronics(Age 10-15) - 400/=
3.வீட்டிலுள்ளவர்களுக்கான செலுலார் - 300/=

MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd Floor, Galle Rd, Wellawatta. TP - 0112-361362

அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...


வருட சந்தா ரூ300 மட்டுமே

தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்டன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

புதிய கல்விச் செல் நெறிகளை அறிந்து கொள்ள...

வாசியுங்கள் அகவிழி

விழுது




ஆற்றல் மேம்பாட்டு மையம்

நமது செய்தி
Namathu Seithi

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2005

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தர் ஒருவர் திருப்திகரமான 07 வருட சேவையைப் பூர்த்திசெய்திருப்பதுடன், க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் சித்தியடைநதவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

ஈ)அரச சேவையிலோ அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றிலோ பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் திருப்திகரமான 10 வருட சேவையை பூர்த்திசெய்திருப்பதுடன்,

(I)சிரேஷ்ட கல்விச் சான்றிதழ் பரீட்சையில் நான்கு பாடங்களில் திறமைச் சித்துகள் அல்லது

(II)க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியும், சிங்களம் / தமிழ், எண்கணிதம் / கணிதம் / பிரயோக கணிதம் / வர்த்தக எண் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(III)தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் (NCGE) பரீட்சையில் நான்கு பாடங்களில் 'B' தரத்திலான சித்தியும், இரு அமர்வுகளுக்கு மேற்படாமலும் ஒரு அமர்வில் ஐந்து பாடங்களுக்குக் குறையாமலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

## III.முகாமைத்துவ உதவியாளர் (கைத்தொழில்)

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,080 - 1 x 2,460 - 11 x 3,480 - 173,820/= (TB-3-6)

**கல்வித்தகைமை :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்* பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

வடக்கு - கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தின் நெசவு மேற்பார்வையாளராக பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருட திருப்திகரமான சேவையையும், தொடர்ச்சியாக 05 வருட வேதன ஏற்றங்களயும் பெற்றிருத்தல் வேண்டும்.

## IV.கலாசார உத்தியோகத்தர் வகுப்பு II

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,080 - 1 x 2,460 - 11 x 3,480 - 173,820/= (TB-3-6)

**கல்வித்தகைமை :**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கீழைத்தேச மொழிகள் / வரலாறு / தத்துவவியல் / தொல்பொருள் ஆராய்ச்சியியல் / நாகரிகம் / கல்வி / சமூகவியல் / நாடகமும் அரங்கியலும் / நுண்கலை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மேலே தரப்பட்ட பாடங்களில் ஏதாவது இரு பாடங்களைக் கொண்ட பொதுப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

10 வருட தொடர்சியான சேவையினை கொண்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட பொதுச் சேவை / மாகாண சேவை அலுவலராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீடசையில் ஒரே தடவையில் இரு பாடங்களில் திறமைச்சித்தி அடங்கலாக 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கலாசார வேலைகளில் 05 வருடத்திற்கு குறையாத அனுபவத்தினையும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஆ)தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் சிறந்த அறிவு பெற்றிருத்தல் மேலதிகமான தகைமையாக கருதப்படும்.

## V. சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,080 - 1 x 2,460 - 11 x 3,480 - 173,820/= (TB-3-6)

**கல்வித்தகைமை :**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல் / கல்வியியல் / உளவியல் / சமூகவியல் அல்லது அதற்கு சமமான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருப்பதுடன் சிறுவர் நன்னடத்தை திணைக்களகத்தின் வோடன் / உப வோடன் / உதவி இல்லத் தலைவர் / மேற்றன் அல்லது தொழில் போதனாசிரியர் அல்லது வகுப்பு I பயிற்றுவிப்பாளர் ஆகிய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

அல்லது

இ) க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 04 பாடங்களில் அல்லது இதறகுச் சமமான பரீட்சை ஒன்றில் சித்தியடைந்திருப்பதுடன், சிறுவர் நன்னடத்தை திணைகளத்தின் மேற்கூறப்பட்ட பந்தி (ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் இலங்கை சமூகசேவை பாடசாலையினால் வழங்கப்பட்ட இரண்டு வருட சமூகசேவை டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஈ)பந்தி (ஆ)வில் கூறப்பட்ட பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்டு தொடர்ச்சியாக ஏழு வருடத்திற்கு குறையாததும், திருப்திகரமான சேவையில் உள்ளவர்களும் ஆகக் குறைநதது க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு பாடங்களில் அல்லது அதற்குச் சமனான பரீடசையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் மொழி, கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

இலங்கை சமூக சேவைக் கல்லூரி, சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் (ஐககிய இராச்சியம்) வழங்கப்படும் சிறுவர், இளைஞர் பாதுகாப்பு பயிற்சியின் ஒரு வருட பூர்த்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

உ)பொது எழுதுநர் சேவை அல்லது அதற்கு சமமான சேவையில் திருப்திகரமாக 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

## VI.மருத்துவ ஆவண உத்தியோகத்தர் (திறந்த போட்டிப் பரீட்சை மட்டும் இப் பதவிக்கு நடத்தப்படும்)

**சம்பள அளவுத்திட்டம்.**

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 9/2004 இற்கு அமைய
ரூபா 133,380 - 1 x 2,460 - 15 x 3,480 - 188,040/= (TB-3-8)

**கல்வித்தகைமை :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பொருளியல்/கணிதம் அத்துடன் புள்ளிவிபரவியல் அல்லது விலங்கியலில் பட்டம் பெற்றிருத்தல்.

**08. எழுத்துப்பரீட்சை :**

ஒவ்வொரு பதவிக்குமான பரீட்சைகள் தனித்தனியாகவே நடத்தப்படும். இப் பரீட்சைகள் தமிழ் / சிங்களம் ஆகிய இரு மொழி மூலங்களிலும் நடத்தப்படும். இப் பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு.

**1. பொது உளச்சார்பு — 1 மணித்தியாலம் — 100 புள்ளிகள்.**

சொற்றொடர்கள் எண்கள் பற்றி உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதராமாகக் கொண்டு அப் பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்கிரகிப்பு அளவீட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையில் தொடர்புடைய புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்.

**2. பொது அறிவு — 2 மணித்தியாலம் — 100 புள்ளிகள்.**

தேசிய, பிராந்தியம் மற்றும் உலகம் பூராகவுமுள்ள பலதரப்பட்ட அமைப்பு சுற்றாடல்களிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல், விஞ்ஞான, பொருளாதாரம், விளையாட்டு ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவுமுள்ள பரீட்சாத்திகளின் அறிவையும், தெளிவையும் அளவிடுவதுடன் பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் துறைசார் அறிவையும் பரிசோதிப்பதாக அமையும்.

நேர்முகப்பரீட்சையில் தகைமைகள் பரசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டது.

**வே.பொ.பாலசிங்கம்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு-கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**

---

## மாதிரி விண்ணப்பபடிவம்

### வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் ..........................பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த /மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2005

சுட்டெண்: [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

விண்ணப்பிக்கும் பதவி :.................................. பதவி இல: [ ]

திறந்த போட்டிப் பரீட்சை [ ]

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை [ ]

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி :-
தமிழில் : :-..................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-..................................

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில்:..................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ..................................

03. தபால் முகவரி:-
தமிழில் :- ..................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):- ..................................

04. அடையாள அட்டை இல. [ | | | | | | | | | ]

05. பால்:- ஆண் M [ ] பெண் F [ ]

| 06. பிறந்த திகதி: | வருடம்: | மாதம்: | திகதி : |
|---|---|---|---|
| 2005.10.18ஆம் திகதியன்று வயது | வருடங்கள்: | மாதங்கள்: | நாள்கள்: |

07. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்: தமிழ் T ; சிங்களம் S

08 தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்: [ ]
(07 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

09. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]
முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

10. நீங்கள் இலங்கைப் பிரஜையா ? ஆம் ; இல்லை [ ]

(13ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த/மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2005

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
(2) பிரதேச செயலாளர் பிரிவு :-
(3) வதியும் கால எல்லை: தொடக்கம்- வரை-
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம் :-
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம் : மாகாணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம் : திகதி :

12. கல்வித்தகைமைகள் :

(I) பட்டத்தின் வகையும் :- ..........................................
(II) பட்டம் பெற்ற திகதி :- ..........................................
(III) பல்கலைக்கழகம் :- ..........................................
(IV) பாடங்கள்:- ..........................................

13. பிற கல்வி / தொழில்சார் தகைமைகள் :-

14. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

| |
|---|
| |

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட .......................... பிரதேச செயலகத்தின் .................... ஆம் இலக்க .......................... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன், என்றும் மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

.................... ..........................................
திகதி: விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 128,160/- இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்று படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ..........................................
.................... என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ..........................
ஆம் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ..........................................
திகதி: கையொப்பத்தைஉறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

16. (வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ளவர்களின் உபயோகத்திற்கு)
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் .......................... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து .......................... மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத் தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம்மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ..........................................
திகதி: கிராம சேவையாளர் கையொப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. திருமதி செல்வி !.............. அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும் என்பதையும் இவர் கடந்த 05 வருட சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.................... ..........................................
திகதி: திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)


A Wonderland




சிறுவர்களின் ஆக்கத்திறன் விருத்திக்கான களம்
A space for childrens' creative expression
Active Theatre Movement

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, சிறுவர்களின் ஆக்கத்திறன் விருத்தியை எடுத்தியம்பும் கண்காட்சி.

+ சிறுவர்களின் கலைத்திறன் வெளிப்பாடு
+ பொம்மலாட்ட நிகழ்வு
+ மந்திரக்குகை
+ மாயாஜால விளையாட்டு
+ குரங்காட்டம்
+ சிறுவர்களுக்கான நாடகம்

காலம்: 01.10.2005
நேரம்: காலை 10.00 மணி - மாலை 4.00 மணிவரை
இடம்: தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலம், பருத்தித்துறை.


### மொழித் திறன் தேர்வு

தென்மராட்சி, ஒக்.1
உலக ஆசியர்கள் தினத்தையொட்டி தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான தமிழ் மொழித்திறன் தேர்வு இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத் தேர்வுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களை பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அறிவித்துள்ளார்.(ஒ-117)

### நெருப்புக்காய்ச்சல் குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் பரவும் அறிகுறி இருப்பதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் 27 வீதமான தாக்கம் இருப்பதாகவும் - இதற்கு நிலத்தடி நீர் மாசடைதல் முக்கிய காரணமாகும் எனவும் - சுட்டிக் காட்டப்பட்டது. (3-31)

### அரியாலையில் புனரமைப்புப் பணி

யாழ்ப்பாணம், ஒக்.1
'நிக்கொட்' நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அரியாலைப் பகுதியில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

அரியாலை மத்தியிலுள்ள இளையதம்பி வீதி, அரசடிவீதி, யூதா கோயில் வீதி மற்றும் கலைவாணி சனசமூக நிலையம் என்பன புனரமைக்கப்பட்டுள்ளன.

தற்போது 25 லட்சம் ரூபா செலவில் கிராம அபிவிருத்திப் பணிமனைக் கட்டடம் அமைக்கும் வேலை நடைபெற்று வருகின்றது. கலைவாணி முன்பள்ளிக்கான சிறுவர் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.(ஒ-202)


மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய், சவுதிஅரேபியா ஆகியநாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டிட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரிங் வேலை அனுபவம்கொண்ட | |
| தச்சுத் தொழிலாளர்கள் | (SHUTTERING CARPENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் | |
| வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்கு பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர் வர்ணம்தீட்டுவோர் | (WALL PAINTER) |

தொடர்புகளுக்கு:
RAIN BOW TRAVELS &TOURS
32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219,021,2223237



கண்ணீர்க் காணிக்கை

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ரதிக்குமாரி பாலசுப்பிரமணியத்தின்
அன்பு மாமனார்

கதிரவேலு வேதவனம்

அவர்களின் மறைவையிட்டுத் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் கழகம்,
யா/வேம்படி மகளிர்,
உயர்தர பாடசாலை.
(சி/45368)(26-18-16)



ஈராண்டு பிரிவின் துயர்



அமரர்
கிறிஸ்ரியன் இஸ்ரனிஸ்
ஜெயகாந்தன் (B.A)

மலர்வு 06-09-1974
உதிர்வு 01-10-2003

ஆண்டுகள் பல சென்றாலும்
உன்னை நாம் மறந்தறியோம்
காண்டற் கரிய உன்
வாழ்நாள்கள் நினைந்துருக
ஏன் பிரிந்தாய் எம் மகனே?
எல்லோருக்கும் சுடர் ஒளியாய்
வேண்டுகின்றோம் இறையரசை
உன் ஆன்மா வீடுபெற !

3, சென் ஆன்ஸ் லேன்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

கிறிஸ்ரியன்
குடும்பத்தினர்.

(S0511)(11-16)

# தமிழர் மீது போரைத் திணிக்க...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் பெற்றுக்கொண்ட இறைமையின் மூலம் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழ்பேசும் மக்கள் ஒடுக்கப்பட்டனர். குடியுரிமைச் சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் மொழியுரிமையும்,வேலைவாய்ப்பு உரிமையும் பறிக்கப்பட்டது. கல்வி தரப்படுத்தல் சட்டம் மூலம் கல்வியுரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமையும் மறுக்கப்பட்டது. எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக நிலச் சூறையாடலுக்குட்பட்டு எமது குடித்தொகைப் பரம்பல் முற்றாக சிதைக்கப்பட்டது. இவ்வாறாகத் தமிழ்பேசும் மக்களாகிய எமது வாழ்வுரிமை பறிக்கப்பட்டது.

சட்டங்கள் மட்டுமன்றி இலங்கைத் தீவின் அரசியல் யாப்புக்களுமே இனவாத ஒடுக்கு முறைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டன. சோல்பரி ஆணைக்குழுவின் அர சியல் யாப்பில் சிறுபான்மை மக்களைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்ட 29 ஆவது பிரிவு பின்னர் 72ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சிறிலங்கா சோசலிச சனநாயகக் குடியரசு யாப்பின் மூலம் நீக்கப்பட்டது. இந்த யாப்பில் பௌத்தமதம் அரச மதமாக்கப்பட்டு இன ஒடுக்கு முறைக்கான யாப்பு வடிவமைக்கப்பட்டது. 78 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பிலும் இது மேலும் தீவிரமாக்கப்பட்டது.

எனவே, நீதி வழங்கப்பட வேண்டிய அரசியல் யாப்பு அநீதியின் உறைவிடமானது.

இத்தகைய இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழ் பேசும் மக்களின் அப்போதைய அரசியல் தலைமை அங்கீகரிக்கப்பட்ட - நாகரிகமான - அரசியல் வழிமுறைகளையும் மென்முறைப் போராட்ட வடிவங்களையும் கைக்கொண்டது. அவற்றினைத் தணிவிக்கும் முகமாகச் சிங்கள ஆட்சியாளர்கள் ஒப்பந்தங்கள் செய்வதையும் பின் அவற்றினைக் கிழித்தெறிவதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள். 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 1965 ஆம் ஆண்டு டட்லி - செல்வா உடன்படிக்கையையும் இதற்கு சான்றாக வைக்கின்றோம். இவ்வாறாக மென்முறைப் போராட்ட வடிவங்களைக் கைக்கொண்ட பொழுது எம் மக்கள் மீது மிகமோசமாக வன்முறைகள், இனப்படுகொலைகள், பாலியல் கொடூரங்கள் என்பன பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில் 70 களின் முற்பகுதியில் ஆயுதம் தாங்கிய தமிழ் மக்களின் தற்காப்புக்கும், விடுதலைக்குமான போராட்டத்துக்கும் தமிழர் தரப்பு நிர்ப்பந்திக்கப்பட்டது.

### வட்டுக்கோட்டை பிரகடனம்

எனவே, அமைதி வழியில் அரசியல் தீர்வுகளை எட்டுவது இயலாது என்பதை ஏற்றுக்கொண்ட தமிழ்த் தலைமைகள், 1976 ஆம் ஆண்டு மே 14 ஆம் நாள் வட்டுக்கோட்டையில் தமிழீழப் பிரகடனத்தை வெளியிட்டன. பின்னர் அரசியல் அரங்கில் அதற்கான மக்கள் ஆணையை 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற சிறிலங்கா நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக்கொண்டனர்.

ஆயுதம் தாங்கி எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்ட நாம், தமிழ் மண்ணையும் தமிழ் பேசும் மக்களையும் ஆழமாக நேசிக்கும் ஆற்றல் மிகுந்த சிறந்த ஒரு தேசியத் தலைவரையும் ஒரு மரபுவழிப் போரை நடத்தவல்ல படையணிகளையும் கண்டு நிமிர்ந்தெழுந்தோம். இதன் மூலம் இலங்கைத்தீவில் ஒரு தனித்தேசிய இனமாகத் தமிழ் மக்கள் நாம் வாழ்ந்து வருகின்றோம் என்னும் உண்மையை உலக அரங்கில் ஓங்கி ஒலித்தோம்.

இப்போராட்ட காலத்தில் சிங்கள ஆட்சியாளர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின்போது தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டன. கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுகளும், எறிகணை வீச்சுக்கள் ஆகியன பாடசாலைகளிலும், மக்கள் குடியிருப்புகளிலும், வழிபாட்டுத் தலங்களிலும் அடிக்கடி நடத்தப்பட்டு எமது மக்கள் பச்சிளம் பாலகர் முதல் முதியோர்வரை கோரமாகப் பலியெடுக்கப்பட்டனர்.

பலவிதமான இராணுவ நடவடிக்கைகளாலும் சொந்த மண்ணிலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு ஏதிலிகளாக அலைக்கப்பட்டனர். இத்தகைய அரச பயங்கரவாக் கொடூரங்களையெல்லாம் அரசு என்ற முகத்திரைகொண்டு சர்வதேச சமூகத்தின் முன் சிங்கள பௌத்த பேரினவாதம் மூடி மறைத்தது. ஆயினும் எமது விடுதலைப் போராட்டம் ஆக்கிரமிப்புக்களை எதிர்கொண்டு முறியடித்து வெற்றிகளைக் குவித் தது. இந்த வெற்றிகளின் பின்னால் தமிழ்மக்கள் அனைவரும் பொங்குதமிழர்களாய் கிளர்ந்தெழுந்து தேசியவிடுதலைப் போருக்கு தோள்கொடுத்தனர்.

### நடைமுறை அரசு

இந்த வரலாற்றுப் போக்கில் தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு என்றொரு நடைமுறை அரசுக்கான கட்டுமானங்கள் நேர்த்தியான முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

இந்நிலையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை யுத்தத்தினால் வெல்லமுடியாது என்பதை சிறிலங்கா அரசு உணர்ந்துகொண்டது. சமகாலத்தில் சர்வதேச சமூகம் இந்த இன முரண்பாட்டை அமைதிவழியில் தீர்ப்பதற்கான வாய்ப்பை எமது தேசியத் தலைமையிடம் கோரியது. எமது தேசியத் தலைமை தாமாக முன்வந்து யுத்தநிறுத்தம் செய்துகொண்டது.

வேறுவழியின்றியும் சர்வதேச அழுத்தம் காரணமாகவும் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் ஏகப்பிதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு செய்ய முன்வந்தது. அதன்படி 22.02.2002 ஆம் நாளில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்காவின் பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்க அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களும் கையொப்பமிட்டு ஒரு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

### இயல்பு வாழ்வு ஏமாற்றம்!

தொடர்ந்து ஆறுசுற்றுப்பேச்சுகள் நடத்தப்பட்டன. இப்பேச்சுகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைச் சிங்கள அரசு நடைமுறைப்படுத்தத் தவறியது. இதனால் நேரடிப்பேச்சுகள் நின்றுபோக இடைக்கால யோசனையாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு முன்வைக்கப்பட்டது. இதுபற்றியும் தொடர்ந்து பேச சிறிலங்கா அரசு முன்வராததால் பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்வதற்கான சாத்தியங்கள் முற்றாக அருகிப்போயின.

இவ்வாறாக கடந்த மூன்றரை ஆண்டுகளாய் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கான எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போய்விட்டன. சிறிலங்காப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் வளம் நிறைந்த எமது சொந்த நிலங்களும், செல்வம் கொழிக்கும் எமது கடல் வளமும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டு உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டுள்ளது.

இறுதியாக உலகை உலுக்கிய சுனாமி பேரழிவுக்குப் பின்னரும் சிங்கள மேலாதிக்கப் போக்கு மாறவில்லை என்பதை சுனாமி அனர்த்த நிவாரணப் பொதுக்கட்டமைப்புக்கு நேர்ந்த விபத்து நிரூபித்தது. மனிதப் பேரழிவு அவலங்களால்கூட சிங்கள பௌத்த பேரினவாத வெறிக்குள் இறுகிப்போயிருக் கும் நெஞ்சுகளை மாற்றமுடியாது என்பதை உலகம் கண்டுகொண்டுள்ளது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு பதவிக்கான போட்டியில் சிங்கள அதிகார வர்க்கம் முற்றாகச் சிக்கியுள்ளது. மீண்டும் ஒரு யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைத் தோற்கடிப்பதற்கான படைக்கலப் பெருக்க நடவடிக்கை களையும் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் அவர்கள் செய்து வருகின்றார்கள். இவையாவும் சமாதான நடைமுறைக்கான சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு இலங்கைத் தீவில் நிகழ்ந்துகொண்டிருக்கும்போதே நடைபெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றோம்.

இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்பேசும் மக்களுக்கு நியாயமான எந்தவொரு தீர்வையும் முன்னெடுக்கமாட்டார்கள் என்பதை நாம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்திக் கொள்கின்றோம்.

இந்த உண்மைகளை சர்வதேச சமூகமும், யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கால நடவடிக்கைகள் மூலம் புரிந்துகொண்டிருக்கும் என எதிர்பார்த்தோம்.

இந்த உண்மை நிலையின் காரணத்தினால் நாம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகச் சிங்கள பௌத்தபேரினவாதத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றோம்.

### ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவு

எனினும் கடந்த 27.09.2005 அன்று ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தூதுக்குழுவினர் ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்வதற்கு தடைவிதித்துள்ளமை எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் வன்முறையையும் பயங்கரவாதத்தினையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகப் பக்கச்சார்பான முறையில் ஐரோப்பிய ஒன்றியம் சாடியுள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டது போன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்களை பொறுத்தவரையில் தற்போதுள்ள ''சமாதான முயற்சி'' என்ற போர்வையில் நடைபெறும் கால இழுத்தடிப்புகள் தொடர்வதை நாம் விரும்பவில்லை. மாற்றமொன்றை ஏற்படுத்தவே விரும்புகின்றோம். அதற்காக வன்முறையற்ற வழியில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய நீதியான சமாதானத் தீர்வை மட்டுமே அடைய முயல்கின்றோம்.

### ஆதாரமற்ற குற்றச்சாட்டு

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து எமது ஏகப் பிரதிநிதிகளின் சர்வதேச அரசியல் பணிகளிற்கு தடைவிதித்ததன் மூலம் பேச்சுவார்த்தை மேசையில் அரசும் புலிகளும் சமமென்ற நிலையைச் சீர்குலைத்து தமிழர் தரப்பை பலவீனப்படுத்தி சிங்களம் விரும்பும் அரைகுறைத் தீர்வை திணிக்க சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து மேற்கொள்ளும் முயற்சியாகவே நாம் கருதுகின்றோம்.

இச்செயற்பாடு சமாதான முயற்சிகளில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்களின் மீது மீண்டும் ஒரு போரைத் திணிக்க சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு உந்துதல் அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

எனவே, உருவாகியுள்ள போர்ச் சூழல் மாற்றப்படவேண்டுமாயின் நிலைமைகளை புரிந்துகொண்டு ஐரோப்பிய ஒன்றியம், தனது அங்கத்துவ நாடுகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பிரயாணம் செய்ய விதித்துள்ள தடையை நீக்கவேண்டும் எனக்கோருவதுடன்

எமது தாயக நிலத்தையும் கடலையும் ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்கா இராணுவம் எமது மண்ணை, கடலை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்றும்,

எமது நிலத்தில், எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாக வேண்டும் என்றும், அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ்மக்கள் அணி திரண்டபடியே உள்ளோம் என்பதையும் இவ் எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை, தமிழ்பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தை நாம் கோருகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


இன்று 01.10.2005

Annai Nagaa Food City

அன்னை நாகா பூட்சிற்றியில்

சிறுவர்தின கொண்டாட்டம்

இன்றைய சிறுவர் தினத்திலே சிறுவர்களாகிய உங்களுக்கு எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதை முன்னிட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்



சிறுவர்களே! அன்னை நாகா வாங்க!!!

அன்பளிப்புப் பொருள்களை பெற்றுக்கொள்ளுங்கள்


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.1

சாரணர்களுக்கான சாரணிய வழிகாட்டுநர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 6ஆம் திகதி பிற்பகல்3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறவுள்ளது. சாரணர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சாரணிய ஆணையாளர் கேட்டுள்ளார். (3-203)

## மாட்டுவண்டில் சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.1

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் நடைபெறவுள்ளது. (3-202)


## மரண அறிவித்தல்



### பெனடிற் தியாகராஜா யோன்சன்

26.09.2005 அன்று கனடாவில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெனடிற் தியாகராஜா மற்றும் தேவரம்பை தம்பதியரின் அன்பு மகனும் ஜெறோம் (லண்டன்) அவரின் அன்புத் தம்பியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை. (40604)(26-18-11)

தகவல்: தி.அ.ஜெயபாலன் (சிறியதந்தை).

Jayoda ஜயோதா ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7230115 முதல் 7242163 வரை சீட்டிழுப்பு இல. 172 திகதி 29-9-2005

வெற்றி எண்கள் 4 0 8 2 5 5 சுப்பர் எண் 22

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,59,95,175/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,59,95,175/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 50,000/- | 6,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 5,000/- | 5,30,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,041 | 500/- | 5,20,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,467 | 50/- | 5,23,350/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,701 | 10/- | 10,37,010/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 105 | 1,000/- | 1,05,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,051 | 100/- | 1,05,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,364 | 20/- | 2,07,280/- |
| | | மொத்தம் | 46,88,240/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 52,90,840/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 16,286,125/-

தொடர் இல. 6304156 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 03 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான ஸ்டூ மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அனுராதபுரம் | 7230925-8-73 |
| பொலன்னறுவை | 7231293-0-25 |
| மட்டக்களப்பு | 7236129-6-66 |
| திருகோணமலை | 7231002-8-64 |
| மாத்தறை | 7231574-3-43 |
| கொழும்பு | 7231828-8-04 |
| கம்பஹா | 7234753-8-70 |
| கொழும்பு | 7240887-5-12 |

# நல்வாழ்விற்கு வழிகாட்டும் முதியோரைப் பேணுவோம்

## இன்று சர்வதேச முதியோர் தினம்

பழையன கழிந்து புதியன புகுதல் வரலாற்றின் இயல்பு நிலையாகும். இதன் பொருளை நாகரிக வளர்ச்சிப் படியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் பண்பாட்டு ரீதியிலும், உறவுகளின் ஆழத்திலும் ஏற்றுக்கொள்வது மிகவும் கடினமானதே. நவீனத்திற்கு புராதனம் வழிவகுத்திருப்பதைப் போல இன்றைய தலைமுறையினரின் வளர்ச்சிக்கு முதியோரின் பங்களிப்பு ஏதோவொரு வகையில் வழிவகுத்திருக்கிறது. ஆதலால் முதியோர்கள் எம் அனைவராலும் போற்றப்படின் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்களாவர்.

ஆனால், இன்றைய உலகில் பலரும் முதியோர்களை கனம் பண்ணாமலும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமலும் அவர்களைத் தமக்கு பாரமாகவும் எண்ணி நடப்பது மிகவும் கவலைக்குரியது.

யுத்த வடிவமெடுத்த இனப்பாகுபாட்டின் விளைவாக லட்சக் கணக்கான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். எமதுசமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களில் குடும்பச் சீர்குலைவும் ஒன்று. "குடும்பம்" என்ற பாரம்பரியம் உடைக்கப்பட, எம் மண்ணிலே விடுபட்டு கவனிப்பதற்கு இளம் சந்ததியினரின்றி, தனிமையிலே துன்பமனுபவிக்கும் முதியோரின் நிலை பரிதாபத்திற்குரியது.

**சமாதான மனித உரிமைப் பண்பாட்டுப் பணியகம் (செப்பாக்)**

### தனிமை கொடிது

மனிதன் ஒரு சமூக விலங்கு, அவன் தனது வாழ்க்கையைக் கூட்டாக, மற்றவர்களுடன் இணைந்தே வாழப் பழகிக் கொண்டுள்ளான். அந்த வகையில் தனிமை என்பது கடினமான ஒன்று. அதிலும், வயோதிபத்தில் தனிமை என்பது இன்னும் விரக்தி நிலைக்கு அழைத்துச் செல்லும். இவ்வாறான ஒரு விரக்தி நிலையை - எம்மை வளர்த்து ஆளாக்கி, புத்திமதிகள் கூறி, அனுபவங்களைப் பகிர்ந்து, கதைகள் சொல்லி, வழி நடத்தியவர்களுக்கு கொடுப்பது என்பது நியாயமில்லாதது தானே?

வீடுகளில் எம்மோடு வாழும் முதியவர்களையும் நாம் பேணி, பராமரிப்பதில் அக்கறை செலுத்துகின்றோமா? தள்ளாடும் வயதில் அவர்கள் தம்மைச் சுத்தமாக வைத்திருக்க விரும்பும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உதவி செய்திருக்கின்றோமா? தமது முதுமையில் ஏற்படும் நோய்த்தாக்கங்களில் இருந்து அவர்களை விடுவித்திருக்கின்றோமா? பலவீனமான உடல் தோற்றத்தில் உள்ளவர்களுக்கு அன்றாட உணவுத்தேவையை வழங்குவதில் அக்கறை எடுக்கின்றோமா? ஞாபக சக்தி குறைவினால் அவர்கள் செய்யும் இடையூறுகளை அவர்க்கு பக்குவமாக எடுத்துக்கூற எப்போதாவதுநாம் யோசித்துள்ளோமா? அவர்களது இறுதிக் காலங்களில் அவர்களுக்குத் தேவையான ஆன்மீக காரியங்களில் இறுதிக் காலங்களில் அவர்களுக்குத் தேவையான ஆன்மீக காரியங்களில் ஈடுபட ஆவன செய்திருக்கிறோமா? போன்ற பல வினாக்களுக்கு எம்மிடமே தான் விடைகள் உள்ளன. இளமை, முதுமை என்பது வயதுப் பருவங்கள். முதுமைப்பருவம் என்பது எல்லோருக்கும் உரியது. எனவே நாமும் எமது முதுமைப் பருவத்தை அண்மிக்க முன்பு இன்றைய முதியவர்களை அணைத்துச் செல்லவேண்டும்.

### முதியோருக்கு உதவுவோம்

எமது கிராமங்களில் அல்லது கிராம சேவையாளர் பிரிவுகளில், கல்வி கற்று முடித்து வீடுகளில் உள்ள பிள்ளைகளை அல்லது மாணவர்களை, அத்துடன் தாமாக முன்வந்து உதவி செய்ய ஆர்வம் உள்ளவர்களை ஒன்றாக்கி அக்கிராமங்களில் உள்ள வயோதிபர்களுக்கு, தமது அன்றாட காரியங்களை கவனிக்கக் கூடிய விதத்தில் - அதாவது மருந்து வாங்கிக் கொடுத்தல், உணவு வாங்கிக்கொடுத்தல், கோயில்களுக்குக் கூட்டிச்செல்லுதல், சுத்தமாக இருப்பதற்கு உதவி செய்தல் போன்ற சிறிய சேவைகளை அவர்களாக முன்வந்து வழங்க ஏற்பாடு செய்தல்.

இதனைத் திட்டமிட்டு, அதாவது செயற்றிட்டம் போன்று அமைத்து - நடைமுறைப் படுத்துவது சிறப்பாயிருக்கும். இவ்வாறு, பலர்சேர்ந்து பணி நாள்களை பகிர்ந்து கொள்வதன் மூலம், இப் பிறரன்புச் சேவை தொடர்ச்சியாக நடைபெறுவதை உறுதிப் படுத்திக்கொள்ளலாம். ✱

# நூல் வரிசை




**நூல்:** எக்கோ (ECHO)

**வெளியீடு:** எச்.என்.டி.ஈ.வட்டம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இலங்கை உயர் தொழில் நிறவனத்தின் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் எழுத்தாற்றலின் பிரதிபலிப்பாக எக்கோ (ECHO) சஞ்சிகையின் ஐந்தாவது பதிப்பு விளங்குகிறது. உயர்தர தேசிய டிப்ளோமா ஆங்கில வட்டத்தின் அங்கத்தவர் தொகை குறைவாக இருந்தபோதும் எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் இவ்வாறான ஒரு சஞ்சிகை வெளியிடப்பட்டமை பாராட்டத்தக்கது.

பச்சை நிற பின்னணியைக் கொண்ட இச் சஞ்சிகை மிகக் கவர்ச்சியாக அமைக்கப்பட்டதோடு, சில மாதங்களுக்கு முன்னர் பல்லாயிரக் கசணக்கான உயிர்களைக் காவு கொண்ட ஆழிப் பேரலையின் புகைப்படங்களையும் கொண்டுள்ளது. இச் சஞ்சிகை ஆங்கிலத்தில் பல்வேறு துறை சார்ந்த 47 ஆக்கங்களைக் கொண்டுள்ளது. இவை யாவும் இவ் வட்ட மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் ஆக்கங்களாகும். இவற்றுள் பல கவிதைகளும், கட்டுரைகளும், அடங்குகின்றன. ஆங்கிலமும் ஆங்கில இலக்கிய துறையைச் சார்ந்த கட்டுரைகளும் பொருளியல், அரசியல், கலாசார துறைசார் கட்டுரைகளும் இன்றைய உலகில் அதிகமாக பேசப்படுகின்ற பெண் உரிமை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இச் சஞ்சிகை பல கல்விமான்களின் வாழ்த்துரைகளையும் கொண்டுள்ளது.

மொத்தத்தில் இச் சஞ்சிகை பாராட்டத்தக்க ஒரு சஞ்சிகையாகும்.

**ஆர்.கணபதிப்பிள்ளை-**
**வருகை விரிவுரையாளர்.**




**நூல்:** அகதி அரிசி

**ஆசிரியர்:** தையிட்டி அ.இராசதுரை (சிறுகதைத் தொகுதி)

**வெளியீடு:** யாழ்.இலக்கிய வட்டம்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் வித்தியாசமான சிறுகதைகளை எழுதிவரும் அ.இராசதுரையின் புதிய சிறுகதைத் தொகுதி 'அகதி அரிசி'

முகப்பில் அழகான ஒரு குழந்தையின் படத்துடன் இப் புத்தகம் வெளியிடப்பட்டுள்ளமை புத்தகத்தைப் பார்த்ததுமே வாசிக்கத் தூண்டுகின்றது.

இத் தொகுப்பில் 21சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. முதல் கதையே அம்மாவின் கதையாக அமைந்தமை மிகப் பாராட்டுக்குரியது. 'அம்மாவின் பெயர் அம்மா' என்ற கதை தாய்ப்பாசத்தின் மேன்மையை வெகு உருக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஏனைய கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வெரு வகையான ரசங்களையும் ஒவ்வொரு விதத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றன. அனைத்துக் கதைகளும் யாதார்த்தத்தைப் பிரதிபலிப்பது சிறப்பாகும்.

புத்தகத்தின் பின் அட்டையில் ஆசிரியரின் படமும் அவரைப் பற்றிய சுருக்கமான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**-தீபா.**

# சிறுவர் நலனில் அக்கறை பலரும் செலுத்தவேண்டும்

## இன்று சர்வதேச சிறுவர் தினம்

### யார் இந்தச் சிறுவர்கள்!

தற்போதைய சமவாயத்தின் நோக்கங்களின் பொருட்டு 18 வயதிற்குட்பட்ட மனிதப் பிறவி ஒவ்வொன்றும் ஒரு பிள்ளை எனக் கருதப் படுவதனால் அவர்களே! சிறுவர்கள் எனலாம்.

### உரிமை எனப்படுவது!

மனிதப் பிறவி எடுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் உரித்துடைய தேவைகளே! உரிமைகளாகக் கணிக்கப்படுகின்றன.

இவ்வகையில் மானிடப் பிறப்பின் ஒரு பருவமே சிறுவர்கள் ஆவர். எனவே, அவர்களுக்கும் உரிமைகள் உண்டு அல்லவா?

### ஏன் சிறுவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

சிறுவர்கள் தங்களது வளர்ச்சிப் பருவத்தில் தத்தமது ஆளுமையையும் முழுமையையும் இசைவையும் விருத்தி செய்ய நல்ல ஒரு குடும்பச் சூழலிலும் அன்பும் ஆனந்தமும் பற்றுணர்வுள்ள சுற்றாடலிலும் தனி வாழ்வு வாழவும் -

சமாதானம், கண்ணியம், சகிப்புத் தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய இலட்சிய உணர்வுடனும் உடல் உள ஆரோக்கியத்துடனும் ஒரு நாட்டின் நற்பிரஜையாக திகழவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும்.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கு சிறப்பான பராமரிப்பு அவசியம் என்பதால் 1924 ஆம் ஆண்டு சிறுவர்கள் உரிமைகள் பற்றி ஜெனிவா பிரகடனத்திலும் 1959 ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையிலும் கொண்டுவரப்பட்டு 1989 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. இதன் பின்னர் எமது நாடான இலங்கையில் 1991 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் நடைமுறையில் செயற்படுத்தப்பட்டது.

இவ்வகையில் எமது நாட்டில் தற்பொழுது செயற்படுத்தப்படும் சிறுவர் உரிமைகள் கிட்டத்தட்ட 40 இற்கும் மேல் உள்ளன. இவற்றில் சில முக்கியமான சிறுவர் உரிமைகளை நோக்குகையில்:-

- ✱ பிள்ளைகளுக்கிடையில் பாகுபாடு காட்டாமை.
- ✱ பெற்றோரின் வழிகாட்டலும் பிள்ளையின் வளர்ச்சியும்.
- ✱ பிரிந்து வாழும் பெற்றோர்கள் இருவருடனும் தொடர்புபடும் உரிமை.
- ✱ தகவல்களைப் பெறவும் தன் கருத்துக்களை வெளியிடவும் பிள்ளைகளுக்கு உரிமையுண்டு.
- ✱ சிந்தனை, மனச்சாட்சி, மதவழிபாட்டுச் சுதந்திரம் பெறும் உரிமை.
- ✱ இம்சை, புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- ✱ சுகாதாரமும் சுகாதார சேவையும் பெறும் உரிமை.
- ✱ எல்லாப் பிள்ளைகளும் கல்வி பெறும் உரிமை.
- ✱ வேலைகளுக்கு அமர்த்தாது பாதுகாக்கும் உரிமை.
- ✱ போதைப்பொருள்களை பாவித்தல், விநியோகித்தல் போன்றவற்றில் ஈடுபடாது பாதுகாக்கும் உரிமை.
- ✱ பாலியல்வாரியாக சுரண்டல்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை உடையவர்களாவர்.

### சிறுவர் தினம் கொண்டாடுவதன் நோக்கம்!

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" இங்கு நாளைய தலைவர்கள் என்பவர்கள் எதிர்கால சமூகத்தவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். இதனால், எதிர்கால சமூகம் சிறந்த கட்டடமாகத் திகழ சிறுவர்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தப்படவேண்டும். இன்றைய விஞ்ஞான உலகில் சுமார் 250 கோடி சிறுவர்கள் தீர்க்கப்படாத பிரச்சினைகள் வேதனைகளைச்சுமந்தபடி வாழ்ந்து வருகின்றார்கள்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு சகல நாட்டுமக்களும் சிறுவர் நலனில் கரிசனை கொள்ளவேண்டும் என்பதற்காகவே 1989 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### யாழ். மாவட்டத்தில் எமது சிறுவர்கள்!

தற்பொழுது நாகரிகமும் நவீன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ந்து பல்வேறு சாதனைகளையும் சாகசங்களையும் புரிந்து உலகையே பிரமிக்கச் செய்து விட்ட நிலையில்-

கடந்த 20 வருடகாலமாக நடைபெற்ற யுத்ததால் பாதிக்கப்பட்டவர்களின் 1/3 பங்கினர் சிறுவர்கள் ஆவார்கள். இதில் கொல்லப்பட்டவர்களும் அங்கவீனமாக்கப்பட்டவர்களும் அநாதைகளாக்கப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

போர்தான் ஓய்ந்தது. இனி நிம்மதியாகி விடலாம் என்று எண்ணிய சிறுவர்களுக்கு மூச்சு விடமுடியாத அளவுக்கு சிறுவர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டு உடலிருந்து உயிரைக் கூட பிரித்து வெறும் சடலமாக்கும் செய்திகளைப் பத்திரிகையில் பார்க்கின்றோம். இது மட்டுமா? சிறுவர்களை இம்சித்தல், வேலைக்கு அமர்த்துதல், கடுமையான தண்டனைகளை வழங்குதல், பட்டினி போடுதல், கல்வி உரிமையை மறுத்தல் போன்ற செயல்களாலும் சிறுவர்களைத் துன்புறுத்தி வருகின்றார்கள்.

எனவே, இப்படியான நிலை தொடர்ந்தும் எமது பிரதேசத்தில் நிகழ இடம்கொடுத்தால் எமது எதிர்கால சமுதாயம் அத்திபாரம் அற்ற கட்டடம் போன்றதாகிவிடும். ஆதலால், சிறுவர்களின் நலனில் அக்கறை கொள்ளக் கூடிய வகையில் பெற்றோரும் சரி, ஆசிரியர்களும் சரி, சமூகத்தினரும் சரி கரிசனை கொண்டு விஞ்ஞான உலகுடன் சங்கமிப்போம்.

**ம.வித்தியாதரன்**
*கரம்பொன்.*

## மக்கள் சேவையில்...

சாவகச்சேரி,ஒக்.1

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு இரு பட்டதாரிகள் வடக்கு - கிழக்கு பொதுநிர்வாக திணைக்களத்தால் கடந்த மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிதி), நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (பொது) ஆகிய பதவிகளுக்கு முருகையா -சிவானந்தன், சண்முகநாதன் - ஜெயகுமார் ஆகிய இருவரும் நிய மனம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, வலி.வடக்கு பிரதேச சபைக்கு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (நிதி) பதவிக்கு க.ஞானச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். (ஒ-31)

✱ ✱ ✱

வலி.தெற்கு,ஒக்.1

சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக அ.ஜெயக்குமார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவரை வரவேற்கும் முகமாக பாடசாலையில் ஆசிரியை வசந்தி சோதிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்தப் பாடசாலையில் இருந்து தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற சு.சண்முககுல குமாரனின் சேவையைப் பாராட்டியும் புதிய அதிபர் அ.ஜெயக்குமாரை வரவேற்றும் கா.கணேசதாசன் உரையாற்றினார்.

(ஒ-152)

✱ ✱ ✱

வரணி,ஒக்.1

தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பல நோக்குக் கூட்டறவுச்சங்க புதிய நெறியாளர் குழு தெரிவு கடந்த மாதம் 4ஆம் திகதி இடம்பெற்றது. கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவசோதி மற்றும் கூட்டுறவுத்துறை பொறுப்பாளர் பஸ்பன் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற கூட்டத்தில் புதிய தலைவராக வே.விநாயகமூர்த்தியும் உப தலைவராக இ.தெய்வேந்திரமும் மற்றும் வே.இரத்தினசிங்கம், செ.நவரட்ணசாமி, இ.மகாலிங் கம், க.சபேசன், செல்வி த.தேன்மதி ஆகியோர் உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஒ-170)



## புனித திரேசாள் ஆலயப் பெருவிழா

யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்திருக்கும் குழந்தை யேசுவின் புனித திரேசாள் பெருவிழா 23.09.2005 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று (01.10.2005 ) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் நற்கருணை விழா திருப்பலியை யாழ்.மறைமாவட்டக் **குரு முதல்வர் J.நீக்கிலஸ்** அடிகளார் ஒப்புக்கொடுப்பார்.

02.10.2005 காலை 7 மணிக்கு பெருநாள் திருப்பலி சிறப்பான முறையில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியை **அருட் தந்தை F.டானியேல் OMI** ஒப்புக்கொடுப்பார். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெறும். மறையுரையாற்றி எம்மை வழிநடத்திய **அருட் தந்தை ஜெறோம் லம்பேட் OMI** அவர்களுக்கு எமது உள்ளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(40553) (24-26-11-18)

**பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்.**



வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி

## பதவி வெற்றிடம்

லோறிச் சாரதி சம்பளக் குறியீடு - 312.14 (165/88)

சம்பளத் திட்டம்: 3750-5200 +1250 + 2500/=
70x10 - 75x10

வயதெல்லை: **18-45 (31/97)**
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

தகைமை: 5ஆம் வகுப்புச் சித்தி அடைந்திருப்பதுடன், (பஸ், லொறி, டிராக்ரர்) செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரமும் 2வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

விண்ணப்ப முடிவு திகதி: 15-10-2005

விண்ணப்பப்படிவங்களை
தலைமைக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முகவரி:
**"பொது முகாமையாளர், வலி.கிழக்கு (தெ.ப.),
ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**

(சி/45356) (24-26-11-18) **- பொது முகாமையாளர்.**



## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
**16 - 12 - 1940**



**உதிர்வு**
**15 - 09 - 2001**

### திருமதி கோகிலா சோமசுந்தரம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியையும் லயன் சீமாட்டியும்)*

திதி : அபரபக்ஷ 01-10-2005

**அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எமக்கு வழிகாட்டி
எம்மை ஆளாக்கி வாழவைத்த
அன்புத் தெய்வமே! ஆருயிர் அம்மாவே!
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்
எப்போது காண்போம் உங்கள் அன்புமுகம்
ஏங்கித் தவித்து நிற்கின்றோம்.**

*தங்கள் பிரிவால் துயருறும்,*
**கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*113, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.*

(40590)(26-11-18)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு**
**11 - 02 - 1970**



**உதிர்வு**
**12 - 10 - 2004**

### திருமதி அமிர்தாம்பிகை ராதாகிருஸ்ணன் (வசந்தா)

திதி : 01-10-2005

**ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பு ஊற்று என்றும்
எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

*உங்கள் பிரிவால் துடிக்கும்*
**கணவர், மகள்,
அக்கா, அண்ணாமார்.**

தாவளை- இயற்றாலை,
கொடிகாமம்.

(40420)(26-11-18)


## வண்ணார்பண்ணையில் கிராம அபிவிருத்திச் செயலகம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தால் வண்ணார்பண்ணை வடமேற்கு பகுதியில் 9லட்சம் ரூபா செலவில் கிராம அபிவிருத்திச் செயலகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இக் கட்டடப்பணியின் 30 சதவீத வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில் உள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் திட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச செயலகத்தினால் கள்ளப்புறா வயல் காணியினுள் ஒருகிலோமீற்றர் நீளமான உள் வீதி ஒன்று கிரவலினால் அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதியில் அண்மையிலேயே மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் இத் திட்டத்தின் கீழ் 24 வீடுகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (3-12)

## கைதடி விக்னேஸ்வராவில் புதிய கொட்டகை அமைப்பு

தென்மராட்சி,ஒக்.1

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தற்காலிக வகுப்பறைக் கொட்டகை அமைக்கப்படவுள்ளது.

இக் கொட்டகை அமைப்பதற்கான நிதியினை வெளிநாட்டில் உள்ள இவ் வித்தியாலயப் பழைய மாணவர் ஒருவர் வழங்கியுள்ளார் என்று வித்தியாலய அதிபர் ச.ஞானலிங்கம் தெரிவித்தார். (3-117)

## பாடசாலைகளில் சூழல் பாதுகாப்புப் படையணிகள்

வலி.தெற்கு,ஒக்.1

கிராம, நகர வேறுபாடின்றி சுற்றுப்புற சூழல் மேம்பாட்டுக்காக பாடசாலைகளில் படையணிகள் உருவாக்கப்பட உள்ளன. பாடசாலைகளின் வகைகளை பொறுத்து அவற்றின் பொறுப்புகளும் செயற்பாடுகளும் அமைந்திருக்கும்.

தரம்1 தொடக்கம் 5வரை ஒரு படை அணி, தரம் 6-8, தரம் 9-11, தரம் 12-13 ஆகிய நிலைகளில் ஏனைய படை அணிகள் அமைந்திருக்கும்.

ஒவ்வொரு பிரிவில் இருந்தும் 5பேரைக் கொண்ட மொத்தம் 20 அங்கத்தவர்கள் இக் குழுக்களில் அடக்கப்படுவர். ஒவ்வொரு குழுவுக்கும், படைஅணிகளுக்கும் ஒரு தலைவர் இருப்பர். இவர்களுக்கு உதவியாக திறமையுள்ள ஆசிரியர், ஆர்வமுள்ள ஆசிரியர் இருவர் செயற்படுவர்.

தாயகச் சூழல் மேம்பாட்டுக்கான நிகழ்வுகளைப் பாடசாலைகளில் அரம்பிக்குமாறு கல்வி, பண்புசார் விருத்தி மேலதிக செயலாளர் எம்.ஜி.ரி.நவரத்தின அறிவித்துள்ளார். (3-152)

## கண்டெடுத்த பணப்பை நீதிமன்றில் ஒப்படைப்பு

தென்மராட்சி,ஒக்.1

சாவகச்சேரி ஹென்ஸ்மன் வீதியில் நீதிமன்ற ஊழியர் ஒருவரால் கடந்த வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணத்துடன் கூடிய பணப்பை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணப்பையினைத் தவறவிட்டவர் உரிய ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.(3-117)

## மரக்கன்று நடுகை வாரம் லயன்ஸ்கழகம் அறிவிப்பு

தென்மராட்சி,ஒக்.1

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி பொதுச் சந்தையில் கடந்த வியாழக்கிழமை மரக் கன்றுகளை நாட்டினர்.

கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நகர சபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டினார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் செப்ரெம்பர் மாதத்தினை மரக்கன்று நடுகை மாதமாகப் பிரகடனப் படுத்தியதையடுத்து மரக்கன்றுகள் நடப்பட்டுவருவதாக கழகச் செயலாளர் லயன் எம்.பீ.சண்முகநாதன் தெரிவித்தார். (3-117)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி,ஒக்.1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 29 பேருக்கு எதிர்வரும் ஏழாம் திகதி காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்தினை எதிர்வரும் திங்கட்கிழமை வலயக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்களை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார். (3-117)


## யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## விசேட கலந்துரையாடல்

*எதிர்வரும் 03-10-2005 அன்று முற்பகல் 11 மணிக்கு எமது சங்கத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற வுள்ளது. இதை முக்கிய விடயமாகக் கருதி சகல அங்கத்த வர்களும் தவறாது கலந்துகொள்ளவும்.*

இ.பேரின்பநாயகம்.
*தலைவர்*

கா.பாஸ்கரன்.
செயலாளர்

(சி/45357)(26-11-18)



**Save the Children**
**in Sri Lanka**

We are looking for a committed & energetic individual to join our team as:

**Partnership Development Officer- Emergency Preparedness**

Save the Children in Sri Lanka (SCiSL) is an International Non Governmental Organisation working for the rights and well-being of children, irrespective of nationality, race or religion. Together with children, we are helping to build a better world for present and future generations.

The aim of the post is to work with Save the Children team and other stakeholders to ensure emergency preparedness in place at organizational and program levels.

**Base Station**
Jaffna

**Qualifications and experience**
**Essential**

- Graduate qualifications in social sciences or equivalent experience in a similar position
- About 3 years work experience in an NGO.
- Two years experience managing emergency preparedness and response projects with a policy influencing dimension
- Knowledge of geographical terrain and socio-cultural structure in Jaffna.
- Experience of planning and managing projects, including budget
- Experience of and commitment to participatory approaches
- Experience in working with impact-focused monitoring frameworks
- Understanding of the overall child rights situation in Sri Lanka - vulnerability and capacities of children in Emergencies
- Ability and willingness to travel widely in disaster prone areas and to work under pressure in difficult situation
- Ability to produce high quality analytical reports and proposals
- Excellent interpersonal skills
- Skills related to computer literacy
- Good knowledge of written and spoken English and fluency in Tamil
- Good organizational skills
- Methodical in work
- Team Spirit

**Desirable**

- Experience of working with children and understanding of child rights and child rights-based approaches to programming.
- Valid driving (motor bike) license

A competitive remuneration package awaits the selected candidate. The age limit at SCiSL is 60 years.

**Duration :**

The above position would be initially for a period of **01 year.**

Please note that all positions in SCiSL are subject to transfer.

**Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.**

Please state the post applied for on the top left hand corner of the envelope and on the top of your application. Applications should be sent with the names of two non related referees on or before **10th of October 2005 to:**

**Save the Children in Sri Lanka**
**146, Temple Road, Nallur, Jaffna.**

* No telephone enquiries please.
* Only short listed candidates will be contacted.

(C/45352)

### விடுதலைப் புலிகளின் பயணத்துக்கு எதிரான

# ஐரோப்பிய ஒன்றியத் தடையினால் பேச்சு முயற்சியில் பாதிப்பு வராது!

## அமைச்சரவைப் பேச்சாளர் நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.01

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பிரயாணத்தடை விதிக்கப்பட்டிருப்பதால் சமாதானப் பேச்சுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளைத் தொடர அரசு தயாராகவே இருக்கின்றது என மீண்டும் வலியுறுத்தியுள்ளார் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா செய்தியாளர்களுக்கு விளக்கினார்.

இச்சந்தர்ப்பத்தில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

"இலங்கை அரசின் அழுத்தத்தின் காரணமாகவே ஐரோப்பிய யூனியன் புலிகள் மீதான பிரயாணத்தடையை விதித்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளுக்குப் பாதிப்பு ஏற்படாதா?" - என அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசியல் படுகொலைகளினாலும், அமைச்சர் கதிர்காமரின் படுகொலையினாலும் ஐரோப்பிய யூனியன் புலிகளின் செயற்பாடுகளில் தீவிரமாக அவதானத்தைச் செலுத்தியுள்ளது.

இவ்வாறான படுகொலைகள் தொடரக்கூடாது என்பதாலேயே, ஐரோப்பிய யூனியன் புலிகள் மீதான பிரயாணத் தடையை விதித்துள்ளது.

இது ஐரோப்பிய யூனியன் சுயமாக எடுத்த முடிவு. புலிகள் மீதான இந்தத் தடை வெளிநாடுகளில் தான். இங்கு இல்லை.

"நாம் ஆரம்பத்தில் கூறியதுபோல் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கத் தயாராகவே இருக்கின்றோம். அதேபோன்று புலிகளும் பேச்சுகளுக்கு தயாராகவே இருக்கின்றனர். எனவே சமாதானப் பேச்சில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது" - எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறினார்.(ஐ-க)

# பாதுகாப்புக் காரணங்களுக்காக பிரதமரின் வவுனியா விஜயம் ரத்து

கொழும்பு,ஒக்.1

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வவுனியாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் பாதுகாப்புக் காரணங்களுக்காக இறுதிநேரத்தில் கைவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காகப் பிரதமர் நேற்றுக் கிழக்கு மாகாணத்துக்கும் வடபகுதியின் முக்கியமான இடங்களுக்கும் செல்லவிருந்தார்.

ஆனாலும் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் ஆலோசனைக்கமைய கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் சென்ற அவர், வவுனியா பயணத்தை இறுதிநேரத்தில் கைவிட்டார். முன்னதாகப் பிரதமரின் வருகைக்காக அமைச்சர்கள் பலர் வவுனியாவில் காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# மட்டு. ஈழநாதம் பத்திரிகையின் விநியோகத்தர் சுட்டுக்கொலை!

செங்கலடி, ஒக். 01

மட்டக்களப்பு நகரில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் நேற்றுக் காலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணபிள்ளை யோககுமார் (வயது 38) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஹட்டன் நஷனல் வங்கிக்கு முன்பான பகுதியில் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்தபோது காலை 7.20 மணியளவில் இவர் சுடப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றனர் என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளிவருகின்ற ஈழநாதம் பத்திரிகையை படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விநியோகிப்பவராக இவர் பணியாற்றி வந்தார் என அந்தப் பத்திரிகை நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதமும் இதே பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்த விநியோகத்தரான கன்னமுத்து அரசகுமார் என்பவர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்ட யோககுமாரின் சடலம் விசாரணைகளுக்காக மட்டக்களப்பு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தலை, நெஞ்சு, கைகள் என்பவற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க)

## உணவகத்துக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஒக்.1

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றத் தவறிய உணவக உரிமையாளர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கல்வியங்காடு பகுதியில் இயங்கி வந்த இந்த உணவகத்தில் சுகாதார விதிமுறை கடைப்பிடிக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவினால் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின்போது உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அத்துடன் குறிப்பிட்ட சுகாதாரக் குறைபாட்டை எதிர்வரும் 18ஆம் திகதிக்குள் நிவர்த்திசெய்யும்படியும் உத்தரவிடப்பட்டது. (ஒ-ரி)

# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் ஒக்.1

இன்று சனிக்கிழமை முதல் 7 தினங்களுக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் சர்வதேச முதியோர், சிறுவர், வலுவிழந்தோர் விழா நடைபெறவுள்ளது.

முதலாம் நாளான இன்று சனிக்கிழமை சிறப்பு விருந்தினராக கைதடி அரச வைத்திய அதிகாரி டாக்டர் ச.பி.அருள் நேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து டாக்டர் ச.பி.அருள்நேசன், டாக்டர் ரி.சத்தியசீலன், டாக்டர் என்.நவலஷ்மி, கைதடி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் என். கஜேந்திரன் ஆகியோர் இல்லத்தின் சுத்தம், சுகாதாரத்தைப் பார்வையிடுவர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெறும். (203-202)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

சர்வதேச முதியோர் வார, சிறுவர்தின விழா எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச செயலர் ம.பற்றிக் டிறஞ் சன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் வே.வீரபத்திரபிள்ளை, யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா ஆகியோரும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் பிரதி அதிபர் துரை ஆரோக்கியநாதன் 'முதியோர் முதுசம்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.(203-202)

* * *

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நீராவியடி சைவபரிபாலன சபை மண்டபத்தில் பல்வேறு நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இன்று காலை 9 மணிக்கு முதியோருக்கான நிகழ்வுகள் இடம்பெறும். இந்நிகழ்வில் முதியவர்களுக்கு இரத்த அழுத்தப் பரிசோதனை, சலப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். முதியவர்கள் இணைந்து பாடல்கள் இசைப்பார்கள்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு சிறுவர்களுக்கான நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறுவர்களின் கலைநிகழ்வுகள், வினாவிடைப் போட்டி என்பன இடம் பெறும்.

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி இரு நிகழ்வுகளிலும் யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானமும் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

வடக்கு-கிழக்கு மாகாண சர்வதேச சிறுவர் தினவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் நன்நடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள வடக்கு- கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி ரஞ்சனி நடராஜபிள்ளை தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு, சமூக நலன்துறை அமைச்சின் செயலாளர் வி. எஸ். சுவாமிநாதன் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் சிறப்பு விருந்தினராகவும் மேலதிக அரச அதிபர் இ.சிவசுவாமி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (203-202)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.1

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் சிறுவர் தின நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக இன்று காலை 9 மணிக்கு யாழ். றக்கா வீதியிலுள்ள கலா முற்றத்தில் இருந்து ஊர்வலம் புறப்படும். கோயில் வீதி, பிரதான வீதி ஆகியவற்றினூடாக யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கினை ஊர்வலம் சென்றடைந்ததும் கலை நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

சிறுவர் உரிமைகளை வலியுறுத்தும் வகையில் இடம்பெறும் ஊர்வலத்தில் புனித சாள்ஸ் பாடசாலை மாணவர்கள், யாழ்ப்பாணம், சில்லாலை மற்றும் உரும்பிராய் -

திருமறைக் கலாமன்ற சிறுவர்கள் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டு மணற்காடு - குடத்தனை இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்கள் போன்றோர் பங்கு கொள்கின்றனர்.

மன்ற அரங்கில் கலை நிகழ்வுகள், பரிசளிப்பு வைபவங்கள் போன்றன இடம்பெறவுள்ளன.

* * *

சிறுவர் நல அபிவிருத்தி நிலையம் நடத்தும் சிறுவர் அபிவிருத்திக் கொடிவாரம் இன்று ஆரம்பமாகின்றது.

இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ள கொடிவார ஆரம்ப வைபவத்தில் யாழ். மாவட்டத் திட்டப்பணிப்பாளர் கே.கேதீஸ்வரன் கலந்துகொண்டு முதலாவது கொடியைப் பெற்றுக் கொள்வார். (202)


எமது நிறுவனத்திற்கு நிகர் எதுவும் இல்லை

**BARATHY**

சித்தன்கேணி

**A/L DAY CLASS**

புதிய பிரிவு நடைபெறுகின்றன

பொருளியல் - மகேந்திரன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக்கல்வி - பசில்
அளவையியல் - R.P. சர்மா
தமிழ் - பாலா
இந்து நாகரீகம் - சுரேஸ்
இந்து சமயம் - தரன்
புவியியல் - குமரன்
நாடக. அரங். - சுதன்
கிறிஸ்தவம் - வசந்தன்
அரசியல் - சுகாஷ்

அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்

**தேவை**

217, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் செல்வா மோட்டோசுக்கு ஒரு பணியாள் தேவைப்படுகின்றார். கிராம சேவையாளரின் நற்சான்றுப் பத்திரத்துடன் வரவும். (40601)(-

**உடன் தேவை**

நன்கு Chines உணவு சமைக்கத் தெரிந்தவர்கள் தேவை. (வயது எல்லை 20-40 இடையில்) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

SKY LINE RESTAURANT
188,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
T.P.:021 222 7539 (40607)

**மனோகரா** யாழ்ப்பாணம்
சிம்பு, கோபிகா நடித்த
**தொட்டி ஜெயா**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30. (அ-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சினி)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.


## மரண அறிவித்தல்



### திருமதி கதிரவேலு இராசம்மா

மீசாலை மேற்கு,பங்களா வீதியைச் சேர்ந்த திருமதி கதிரவேலு இராசம்மா நேற்று (30.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிதம்பரப்பிள்ளை -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் கோவிந்தபிள்ளை(அமரர்), கந்தையா, ஆச்சிப்பிள்ளை(கனடா), சுப்பிரமணியம்(பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் லலிதா,சிறீதரன் (அமரர்), கிருபாகரன் (கனடா), குணசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம், குணவதனி(கனடா), கலாரஞ்சனி (பிரான்ஸ்) அன்பு மாமியாரும் சுதர்சன், சுலோஜன், சுகிர்தன் (பிரான்ஸ்), சுகந்தன், இந்துஜா, சஞ்சீவன் (கனடா), நித்திலா, நித்திகன், கர்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பங்களா வீதி,*
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

*தகவல்:*
*கதிரவேலு - கணவர்,*
*குணசீலன் - மகன்,*
*சுந்தரலிங்கம் லலிதா - மகள்.*



# வெளிநாட்டவர்கள் பலரும் பொங்கு தமிழில் பங்கேற்பு!

## பிரபாவின் படத்துடன் இங்கிலாந்துப் பெண்மணி

யாழ்ப்பாணம்,செப்.01

நேற்றைய பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு வெளிநாடுகளைச் சேர்ந்தவர் களும் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற சில சர்வதேச தொண்டு நிறுவனங்களில் பணியாற்றுகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சிலர் மொழி பெயர்ப்பாளர்கள் சகிதம் மருத்துவ பீட மைதானத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

அங்கு நடைபெற்ற எழுச்சி நிகழ்வுகளை, மக்களின் உணர்வுகளை, அவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தாம் கொண்டு வந்திருந்த கமராக்கள் மூலம் நிகழ்வுகளைப் புகைப்படம் பிடிப்பதிலும் அவர்கள் ஆர்வம் காண்டினர்.

அவ்வாறு வந்து நின்றவர்களில் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தலைவர் பிரபாகரனின் படங்கள் சிலவற்றை அங்கிருந்தவர்களிடம் கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

அந்த இங்கிலாந்துப் பெண் மணியின் பெயர் ஷாலட் (CHARLOTTE) அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறார்.

தலைவர் பிரபாகரனின் படத்தை ஆர்வத்துடன் வாங்கி வைத்திருக்கிறீர்கள். அதற்கான காரணத்தைக் கூறமுடியுமா என்று அவரிடம் கேட்டோம்.

தங்கள் தலைவர் மீது இந்த மக்கள் காட்டுகின்ற விசுவாசத்தையும் ஆர்வத்தையும் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்தப் படங்களை நான் ஆவணப்படுத்தப் போகின்றேன் - என்றார். அந்தப் வெள்ளைக் காரப் பெண்.

இதேவேளை - வெளிநாடுகளைச் சேர்ந்த சில ஊடகவியலாளர்களும் நேற்றைய நிகழ்வுக்கு வந்திருந்து செய்திகளைச் சேகரித்துக் கொண்டிருந்தனர். (த-9-7-13-12)

## குடாநாட்டில் நேற்று இயல்புநிலை பாதிப்பு

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வை ஒட்டி குடாநாட்டில் நேற்று இயல்புநிலை அடியோடு ஸ்தம்பித்தது.

காலை முதல் வர்த்தக நிலையங்கள், சந்தைகள் அலுவலகங்கள் மூடப்பட்டுக்கிடந்தன. பாடசாலைகள் இயங்கின. பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறாததால் வீதிகள் வெறிச்சோடின.

போக்குவரத்து வாகனங்கள் அனைத்துமே 'பொங்கு தமிழ்' நிகழ்வுக்கு மக்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்டன. ஏ-9 வீதியூடான போக்குவரத்துக்களும் குறைந்து காணப்பட்டன.

'பொங்கு தமிழ்' நிகழ்வு நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகச் சுற்றாடலில் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை சென்.ஜோன்ஸ் முதலுதவிப் படையினரும், தொண்டர்களும் நெறிப்படுத்தினர். பல்கலைக்கழக சுற்றாடல் குறுக்கு வீதிகள் அனைத்திலும் வீதித்தடைகள் போடப்பட்டதால் சன நெரிசல் தவிர்க்கப்பட்டது.

நிகழ்வு முடிவடைந்த பின்னர் மக்களை எற்றி இறக்குவதற்காக பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் சேவையில் ஈடுபட்டன. (ஐ-7-9-12-13-15-17-31-86)



படங்கள்:
அற்புதன், ரமணன், பிரதீபன், பகீரதன், கவிதரன்.

## மஹிந்தவின் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் விசேட கூட்டமொன்று நேற்று ஜனா திபதி மாளிகையில் நடைபெற்றது. காலை பதினொரு மணிக்கு நடைபெறுவதாக இருந்த கூட்டம் பிற்பகல் ஒன்றரை மணியளவில் ஆரம்பமானது. அதற்கு முன்னர் மத்திய குழு உறுப்பினர்களுக்கு மதிய உணவு விருந்தொன்றை ஜனாதிபதி வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சியின் முக்கியமான அமைச்சர்கள் பலர் கலந்துகொள்ளவில்லை. அதேநேரம் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே கிழக்கு மாகாணத்திற்குச் செல்வதாகக் கூறிவிட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகித்தாலும் நேற்றைய கூட்டத்தில் 40 உறுப்பினர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் அது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து கட்சியின் முன்னிலையில் ஜனாதிபதி நீண்ட நேரம் கருத்து வெளியிட்டார்.

சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப்பரவலாக்கல் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு மற்றும் தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய கட்சியின் அனைத்துக் கொள்கைகளும் வரிக்குவரி தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறவேண்டுமென்று ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

விஞ்ஞாபனத்தில் கட்சியின் கொள்கைகள் அனைத்தும் இடம்பெறவேண்டும். அப்படி வகுக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனம் கட்சியின் மத்திய குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திக் கட்சியை இனவாத நீரோட்டத்திற்குள் தள்ளத் தாம் தயாராக இல்லை. தனிப்பட்ட நலன்களுக்கு அப்பால் நாட்டின் எதிர்காலம் குறித்தே கட்சி சிந்தித்துச் செயற்பட வேண்டியதாயுள்ளது.

புதிதாகத் தயாரிக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனம் மத்திய குழுவின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அதனால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொள்ளவும், தேர்தல் நடவடிக்கைகளுக்கு உ[illegible]வும் தாம் தயாராக இருக்கிறார் எனவும் ஜனாதிபதி அங்கு உறுதியாகக் கூறிவிட்டார். அரசியல் நோக்கங்களுக்காக கட்சியை இனவாதப் படுகுழிக்குள் தள்ளிவிடத் தாம் விரும்பவில்லையென்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இப்போதைக்குக் கட்சியில் ஒரு சிலரின் செயற்பாடுகள் தம்மை மிகுந்த கவலையடையச் செய்துள்ளன என்றும் அங்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தாம் கட்சித் தலைவியாக இருக்கும்வரை கட்சியின் கொள்கை, கோட்பாடுகளை அரசியல் காரணங்களுக்காகத் தாரைவார்க் கப்போவதில்லையென்றும், இனப்பிரச் சினை தீர்வு தொடர்பில் கட்சி கொண்டுள்ள கொள்கையை மாற்றியமைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும், முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவுதரவுள்ள சக்திகளை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுடன் இணங்கச்செய்ய முயற்சிகளை எடுக்குமாறும் ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்திருக்கிறார் என அறியவந்தது. (ஐ-க)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் தலைமையிலான இந்தக் குழு வில் அமைச்சர்களான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, ஜோன் செனவிரட்ன, மைத்திரிபால சிறிசேன,நிமால் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே மற்றும் அலவி மௌலான, ரெஜி ரணதுங்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபணம் எதிர்வரும் 7 ஆம் திகதி வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்ட பின்னரே வெளியிடப்படும் எனத் தெரிகின்றது. (ஐ-க)

## இரண்டரை லட்சம் பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாலா திசைகளிலும் இருந்து மக்கள் வந்து குவிந்ததால் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தின் பிரதான வாயிலூடாக உள் நுழைய முடியாமல் மக்கள் கூட்டம் திணறியது.

### அனைவரையும் கவர்ந்த பிரபாவின் 'கட் அவுட்'

மிகவும் உயரமாக அமைந்த மேடையிலே தமிழீழத் தேசியத் தலைவரின் 32 அடி உயர மான 'கட் அவுட்' வைக்கப்பட்டிருந்தது.

நவீன டிஜிற்றல் தொழில்நுட்ப முறையிலே மிகவும் தெளிவாக உருவாக்கப்பட்டிருந்த தலைவர் பிரபாகரனின் 'கட் அவுட்' பொங்கு தமிழ் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அனைத்து மக்களினதும் கவனத்தைக் கவர்ந்திருந்தது.

தங்கள் தலைவனின் பெரிய அளவிலான உருவப்படத்தை அருகில் சென்று பார்ப்பதற்கு மக்கள் முண்டியடித்ததையும் காண முடிந்தது. நிகழ்வின் ஆரம்பத்தில் அரங்கிலே சிவப்பு, மஞ்சள் நிற உடைகளை அணிந்திருந்த பலர் ஏறி நின்று எழுச்சிப் பாடல்களைப் பாடி மக்களையும் எழுச்சியூட்டினர்.

பொதுச்சுடர் ஏற்றல், தமிழீழத் தேசியக் கொடி ஏற்றல் என்பவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரினை மாணவர் அமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளியின் தாயார் திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி, எல்லைப் படை மாவீரர் வீர வேங்கை தயாவின் துணைவியார் திருமதி விஜிதா - தயாபரன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை கரும்புலி லெப்டினன்ட் தொண்டன், 2ஆம் லெப். சேரன் ஆகிய மாவீரர்களின் தந்தையார் க.இராஜரட்ணம் ஏற்றினார். பொங்குதமிழ் சுடரினை யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஏற்றினார். தொடர்ந்து அரங்க எழுச்சி நிகழ்வு நடைபெற்றது.

### மக்களின் கரங்களில் தலைவரின் உருவப்படம்

அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் அனைவரும் தங்களது கையிலே தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தைத் தாங்கியிருந்தனர். பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், மாணவர்கள் என்று அனைவருமே ஆர்வம் மேலிட அணி அணியாக வந்து கொண்டிருந்தனர்.

அரங்கிலே நின்றிருந்த அரங்கவியலாளர்கள் எழுச்சிப் பாடல்கள் வரிசையிலே ''ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம் எங்கள் தலைவன் பிறந்தான் '' என்ற தலைவரின் பெருமைகூறும் பாடலைப் பாடியபோது மக்கள் உணர்ச்சியோடு எழுந்து நின்று தங்கள் கைகளிலே வைத்திருந்த தலைவரின் படங்களை உயர்த்திப் பிடித்தனர்.

''சூரியத் தேவன் பி[illegible]பாகரனே' என்று பல தடவைகள் உரத்துக் [illegible]ஷித்தனர்.

### வானில் பறந்த இராட்சத பலூன்கள்

மருத்துவ பீட மைதானத்தில் நிகழ்வின் ஆரம்ப முதலே இராட்சத பலூன்கள் பறக்க விடப்பட்டிருந்தன.

நூலில் கட்டப்பட்டு வானில் பறக்கவிடப்பட்டிருந்த இராட்சத பலூன்களில் 'தமிழீழமே எங்கள் மூச்சு' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. தமிழீழப் பிரதேசத்தைக் காட்டும் படமும் அதிலே பொறிக்கப்பட்டிருந்தது.

அரங்கிலே நடந்த எழுச்சிக் கூட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயரூபன் தலைமை வகித்தார்.

அவரது தலைமையுரையைத் தொடர்ந்து, எழுச்சிப் பிரகடனத்தை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் இ.கோகுலரூபன் வாசித்தார். அப்போது அனைவரும் எழுந்து கைகளை உயர்த்தி எழுச்சியுடன் அதனைப் பிரகடனப்படுத்தினர்.

அதனைத்தொடர்ந்து, இந்துமதம் சார்பில் பிரம்மஸ்ரீ சந்திரகேசர சர்மாவும், தென்னிந்தியத் திருச்சபை சார்பாக பேராயர் வண. பிதா ஜெபநேசன் அடிகளாரும், கத்தோலிக்கத் திருச்சபை சார்பாக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் வண. பிதா ஜேக்கப் நிக்கலஸும், இஸ்லாமிய மதம் சார்பாக வணக்கத்திற்குரிய மௌலவி சகிலும் ஆசியுரை வழங்கினர்.

பின்னர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இரா. சம்பந்தன், ச.கனகரத்தினம், ஈழவேந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத் தலைவர் அருள்வேல், ஊழியர் சங்கத் தலைவர் தங்கராசா, ஊழியர் சங்க இணைப்பாளர் கலாராஜ், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் எம்.பி., மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் எம்.பி., கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரியகுமார், கிளிநொச்சி தமிழ்த் தேசிய ஏற்பாட்டுக் குழுத் தலைவர் பிரபாகரன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ. சிறில், தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் க.அருந்தவபாலன், இடம்பெயர்ந்த மக்கள் நலன் காப்பகத்தைச் சேர்ந்த கணேஸ், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் குணேந்திரன், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த எஸ்.சுபிதா நன்றியுரையாற்றினார்.

இறுதியாக தேசியக் கொடியிறக்கப்பட்டு எழுச்சி நிகழ்வு நிறைவுற்றது.

(ஐ-ஒ-த-7-9-12-13-15-17-31-75-190-410)


## தேவை

கணனி இயக்குநர்
(D.T.P தெரிந்த அனுபவமுள்ளவர்கள்)
ஒவ்செற் இயந்திர இயக்குனர்
பைண்டர்
அலுவலக நிர்வாகி
ஆர்வமும் தகுதியும் உடையோர் நேரில் வரவும்
351, மணிக்கூண்டு வீதி,வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.